சிதம்பர க்ஷேத்திர மகிமை.

தில்லை ஸ்தல புராணம் என்னும்

# சிதம்பர க்ஷேத்திர மகிமை.




ஆசிரியர்:
சி. பி. மாசிலாமணி பி. ஏ.,

ரைட் ரிஜிஸ்டர்ட்] [விலை அணா 0—8—0

"உமா" கோல்ட் கவரிங் : :
: : நகைகளையே வாங்குங்கள் !

அநேக வருஷங்கள் வரை திருப்தி அளிக்கும்.

UMA 615 STONES
NECKLACE Rs. 25—0—0

UMA 699 PAIR
STONE BANGLES 2-4 SIZE Rs. 20-0-0

BENDING BANGLES 2-4 SIZE Rs. 9—0—0
UMA 217

———

UMA 252 BUTTON Rs. 0—75.
UMA 494 SHIRT LINKS PAIR Rs. 2—25.

பார்சல் சார்ஜ் ரூ. 1—37 பிரத்தியேகம்.

ஆர்டர்களுக்கும், கடிதங்களுக்கும், கேட்லாக்கிற்கும்
ஹெட்டாபீஸிற்கு எழுதவேண்டும்.

**உமா கோல்ட் கவரிங் ஒர்க்ஸ்,**

தலைமை ஆபீஸ்: உமா மஹால், மசூலிப்பட்டிணம்.

மதராஸ் விற்பனை டிப்போ: 90, சைனா பஜார் ரோட்,
(மைசூர் கபே எதிரில்)

பெஜவாடா விற்பனை டிப்போ:
581, சிவாலயம் வீதி, விஜயவாடா.

# சிதம்பர க்ஷேத்திர மகிமை

8-வது பதிப்பு

ஆசிரியர்: சி. பி. மாசிலாமணி B. A.

★

முல்லை அச்சகம், தில்லை.

★

அருள்சோதி ஆசிரம வெளியீடு,

3, பாவாமுதலி தெரு, சிதம்பரம்.

1959.

காபி ரைட்]

[அணு 8.

[விசேஷப் பதிப்பு ,, 12.

ஸ்டாகிஸ்டு:

G. ராமானுஜம் செட்டியார் & சன்,

புஸ்தக வியாபாரம், மேலசன்னதி, சிதம்பரம்.

# சிதம்பர க்ஷேத்திர மகிமை

(விசேஷப் பதிப்பு) விலை அணா 12.

## பொருளடக்கம்.

சிவக்ஷேத்திராலய விளக்கம், சிதம்பரம் நகரச்சிறப்பு, திருவேட்களமும் பசுபதீஸ்வரர் தேவாலயமும், அண்ணாமலை நகரும் சர்வகலாசாலையும், சிதம்பர க்ஷேத்திரப் பெருமை, நான்கு கோபுரங்கள், கோவிலின் அமைப்பு, பஞ்ச சபைகளின் விளக்கம், நட்ன சபைகளும் நடன தத்துவமும், யாத்ரீகர்கள் தரிசனம் செய்யும்முறை, கம்பத்தடி கந்தன், நவக்ரஹ சனீஸ்வராலயம், மூலஸ்தானம், ஊர்த்வ தாண்டவ மூர்த்தியும் சாபேஸ்வரரும், ஆனந்தத்தாண்டவ தரிசனம், வியாக்ரபாதர் பதஞ்சலி வரலாறு, தில்லைக்காளி நடனமும், தில்லையம்மன் கோயிலும், அரசன் இரண்யவன்மனும், சிதம்பர ஆலயமும், நித்திய பூசை, உற்சவ தீர்த்த விசேஷங்கள், சிதம்பர இரகசியம், சந்திர மௌலீஸ்வரர், இரத்தின சபாபதி, சுவர்ண பைரவர், பாண்டியநாயகம் சுப்பிரமணிய மூர்த்தி, தேவார திருவாசகம், சிதம்பரத்தில் நீண்டகாலம் தங்கி ஸ்ரீ நடராஜமூர்த்தியின் திருவருளைப் பரிபூரணமாகப் பெற்ற ஸ்ரீ இராமலிங்க சுவாமி சரித்திரம் முதலியவைகள் அடங்கியுள்ளது.

அருள் சோதி ஆஸ்ரமம்,

3, பாவாமுதலி தெரு, சிதம்பரம்.

# சிதம்பர க்ஷேத்திர மகிமை

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்

சொல்லின் செல்வர் உயர்திரு,

**Dr. ரா. பி. சேதுப் பிள்ளை M A, B.L,**

அவர்களின்

## சிறப்புரை

---

தில்லை "**அருட்ஜோதி ஆசிரம**"த்தில் உறையும் திரு. மாசிலாமணி அவர்கள் வடலூர் அடிகளாரின் அடியுறை; தில்லைச் சிற்றம்பலவர்க்குத் தொண்டாற்றும் தொழும்பர்; என் இனிய நண்பர்.

இவர் எழுதியுள்ள "**சிதம்பரக்ஷேத்திர மகிமை**" என்னும் சிறு நூல் காலத்திற்கு ஏற்றது; மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்றையும் முறை திறம்பாமற் கூறுவது; பாராயணத்திற்கு ஏற்ற சில திருப்பாடல்களை உடையது.

திருக்கோயிலின் பெருமையோடு திருவேட்களத்தில் (**அண்ணாமலை நகரில்**) எழுந்து நிலவும் தமிழ்க் கோயிலின் சீர்மையையும் எடுத்துரைக்கும் இந்நூல் பக்தகோடிகளுக்குப் பயன் தரும் என்று நம்புகிறேன்.

11-2-'58 ரா. பி சேதுப் பிள்ளை.

சிதம்பர க்ஷேத்திர மகிமை விசேஷ பதிப்பு அண 12.
ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் விரிவான சரிதம் ரூ, 5.
ஆசிரியர் :— 3, பாவா முதலி தெரு, சிதம்பரம்.

கவி மார்த்தாண்ட ஸரஸகவிராஜ

உயர்திரு,

# N. S. சிதம்பரேஸ்வர தீக்ஷிதர்

அவர்கள்

# மதிப்புரை

திருவும் கல்வியும் நிறைந்த இவ்வுலகின் கண் விளங்கும் சகல மதங்களுக்கும் ஆதியாயும், ஆதாரமாயுமிருப்பது இந்துமதம். இதற்கு ஆதாரமானது அகில வேத சாஸ்திரங்களான புராணங்களேயாம். இவைகளிலுள்ள ஆழ்ந்த கருத்துகளும், நுண்ணிய விஷயங்களும் எளிய நடையில் நமதமுதச் செந்தமிழில் இருந்தால் எளியோர் முதல் பெரியோர் வரை சுலபமாய்ப் படித்தறியவும், ஆஸ்திகம் நிறைந்து நாஸ்திகம் மறைந்தொழியவும் உதவியாய் இருக்குமென்று யாவரும் விரும்புகிறார்கள். என்பதை இந்நூல் ஆசிரியர் திரு. சி. பி. மாசிலாமணி முதலியார் பி.ஏ. அவர்கள் மிகவும் அன்போடு உணர்ந்து செந்தமிழில் எளிய நடையில் அரிய பெரிய விஷயங்களை அழகாய் அடக்கிச் சிறு சிறு நூல்களாகப் பல வெளியிடும் பெரும் பணியாற்றி வருவது யாவரும் அறிந்ததே.

எல்லாத் தலங்களிலும் சிறந்த தில்லைத் தல வரலாற்றை எல்லா விபரங்களுடன் **சிதம்பர க்ஷேத்திர மகிமை** என்ற பெயருடன் 8-ஆம் பதிப்பும் இப்போது வெளிவந்திருப்பது மிகவும் சிறந்ததே. இதைப் படிக்கும் யாவரும் என்றும் இந்நூலாசிரியரைப் பாராட்டுவர். ஸ்ரீநடராஜ மூர்த்தியின் அருளால் ஆசிரியரையும், ஆஸ்திகர் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

49, கீழவீதி<br>
சிதம்பரம்<br>
19-6-'59

நி. செ. சிதம்பரேச்வர தீக்ஷிதர்

உ

# சிதம்பரம்

இந் நகரம் சென்னை பீச்சு ஸ்டேஷனிலிருந்து தெற்கே 151-வது மைலில் இருக்கிறது. இந்த ஜனத் தொகை 35000. சிதம்பரம் ஸ்டேஷனில் ஒரு சிற்றுண்டி சாலை இருக்கிறது. கோயிலுக்கும் ஸ்டேஷனுக்கும் முக்கால் மைல் தூரம் இருக்கும். குதிரை - மாட்டு வண்டிகள் எப்போதும் கிடைக்கும்.

**அண்ணாமலைநகர்:** (திருவேட்களம்) இது ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கிழக்கே ஒன்றரைமை தூரத்தில் இருக்கிறது. அருச்சனன் பரமசிவனிடத்தில் பாசுபதாஸ்திரம் பெற்ற திருவேட்களம் என்கிற திவ்ய க்ஷேத்திரமும் இதுதான், ஈஸ்வரன் பெயர்: பசுபதீஸ்வரர். தேவி பெயர்: நல்லநாயகி, காலஞ்சென்ற செட்டிநாட்டு அரசர் பெருமான் உயர்திரு ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் சிதம்பரத்திலே பல்கலைக்கழகம் ஒன்று நிறுவவேண்டுமென்கிற சிந்தனையில் ஆழ்ந்திருந்த போது, தாமும் தமது சகோதரர் 'லேட்' திவான்பகதூர் இராமசாமி செட்டியார் அவர்களும் சேர்ந்து 1900-வது ஆண்டில் கட்டப்பட்ட இந்த திருவேட்கள ஆலயத்தில் நினைவுஅலைகள் தோன்றிக்கொண்டேயிருந்தன. அவ்வளவு தான். பசுபதீஸ்வரர் கண்பார்வையிலேயே பல்கலைக்கழகம் கட்டப்படவேண்டும் என்று அப்போதே தீர்மானித்து விட்டார். அதுமாத்திரமா! தில்லையின் எல்லையிலே நடராஜப்பெருமான் திவ்ய கிருபாகடாக்ஷ விசேஷணயத்திற்கு இலக்காகவும் அது இருக்கவேண்டுமென்பது

அவரது அவா. இதைத்தான் நமது கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும ஒரு வெண்பாவில் வெகு அழகாக எடுத்துச் சித்தரிக்கிறார்.

"தில்லைப் பதியுடையான் சிற்றம்பலந் தன்னில்
அல்லும் பகலும் நின்றாடுகிறான் - எல்லைக்கண்
அண்ணாமலை மன் அமைத்த கலைக்கழகம்
கண்ணாரக் கண்டு களித்து"

தனம் செட்டியாரவர்கள் சில ஆப்த நண்பர்களுடன் இது விஷயமாகப் பேசிக்கொண்டே திருவேட்களம் வந்து இப்போது கம்பீரமான தோற்றத்துடன் விளங்கும் மீனாட்சி காலேஜ் வடகிழக்கில நின்றுகொண்டு, எந்த பாகத்தில் பல்கலைக்கழகத்தை நிறுவலாம் என யோசித்த வண்ணமே வானத்தை நோக்க, இரண்டு கருடன்கள் சுற்றிக சுற்றிப் பல முறை உயரே வட்டமிட, அதையே கடவுள் திருவுளச் சம்மதமாகக் கொண்டு அந்த வட்ட மிட்ட பிரதேசத்திலேயே காலேஜ் கட்டடத்தைத் தானும் இருந்து முதலாவதாக 1923-ல் கட்டி முடித்தார். பிறகு பல கட்டடங்களும் ஏற்பட்டுக் கடைசியாக 1929-ல் பல்கலைக் கழகம் உருவாயிற்று.

நமது செட்டியார் அவர்களுக்கு மற்றும் ஒரு விருப்பம் நெடுநாளாக உள்ளத்தில் குடி கொண்டிருந்தது. அது தமிழ் சங்கீதத்தை எப்படியாவது அபிவிருத்தி செய்ய வேண்டுமெனபதே. 1928ஞு மேமீ 11உ பாடகர்களைப் பயிற்றுவிக்க "ராஜா அண்ணாமலை மியூசிக் காலேஜ்" ஏற்படுத்தினர், 1932-ல் அது சர்வகலாசாலையில் சேர்க்கப்பட்டு அதற்கென ஒரு தனிக்கட்டடமும் அமைந்து பிரமாதமான பணி ஆற்றிவருகிறது.

வாய்ப்பாட்டு, பிடில், மிருதங்கம், வீணை முதலியன தக்க பிரபல வித்வான்களைக்கொண்டு பயிற்சி நடத்திவைக்கப் படுகின்றன. இஞ்சினீயரிங் காலேஜ் ஒன்றும் ரயிலடி சமீபத்தில் இருக்கிறது.

சகல சற்குண சம்பன்ன சிகாமணியாய் விளங்கிய தந்தையைப் போலவே அவரது தவ மைந்தராகிய ராஜா சர் M. A. முத்தையா செட்டியார், Kt. Rajah of Chettinad அவர்களும் சகல சற்குண சம்பன்ன சிகாமணியாய் விளங்கித் தமது "சர்வகலாசாலையைச் செவ்வனே பரிபாலித்துவருகிறார் எல்லாம்வல்ல இறைவன் நடராஜமூர்த்திஅன்னாருக்குத் திடதேகத்தையும் திரண்ட ஐஸ்வரியத்தையும், தீர்க்காயுளையும் மேலும் கொடுத்து இரட்சிப்பாராக!

யாத்ரீகர்கள் அவசியம் அண்ணாமலைநகர் சென்று அப்பர் சுவாமிகளாலும், சம்பந்தப்பெருமானாலும் பாடப் பெற்ற திருவேட்களை க்ஷேத்திரத்தில் அமர்ந்துள்ள பசுபதீஸ்வரர், நல்லநாயகியையும் சேவித்து, அப்படியே அங்கேயுள்ள மாபெரும் சர்வகலாசாலையின் மாட்சிமை தங்கிய அற்புத கட்டிட கண்காக்ஷிகளையும் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைவார்களாக! இங்கே ஒரு சிற்றுண்டிச்சாலையும் நல்ல முறையில் நடந்து வருகிறது.

**கனகசபைநகர்:** ஊரின் தென்புறத்தில் ஞானப் பிரகாசம் குளத்திற்கும் அம்மாபேட்டை ரஸ்தாவிற்கும் மத்தியில் புதிதாக "கனகசபைநகர்" என்று ஒரு நகர் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. அதில் வீடு கட்டும் கோவாபரேடிவ் சொஸைடியாரால் நாற்றோட்டமும் சுகாதார

வசதியுமுள்ள பல வீடுகள் புதிய மாடலில் கட்டப்பட்டு அழகாகவும், கம்பீரமாகவும் காட்சியளிக்கின்றன.

**டவுன்:** தாலுக்கா, முனிசிபாலிடி, முனிசிப்கோர்ட் டிப்டி கலெக்டர் ஆபீஸ், ஜில்லா ரிஜிஸ்தராபீஸ், ஆஸ்பத்திரி, பிரசவ ஆஸ்பத்திரி எல்லாம் ஒரு வட்டத்தில் இருக்கின்றன. தபால் ஆபீஸ் மேலவீதியில் இருக்கிறது, இங்கே பப்ளிக் டெலிபோன், ட்ரங்கால் வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தவிர இரு கிளை ஆபீஸ்கள் கீழ்புறத்தில் கமலீஸவரன்கோயில் தெருவிலும், மேல்புறத்தில் லால்கான் தெருவிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன, தெருக்களிலும், வீடுகளிலும் மின்சார விளக்குகளின் வசதியும், குழாய்த் தண்ணீர் வசதியும் உண்டு. தேரோடும் நான்கு பெரிய வீதிகளில் தார் போடப்பட்டு மிகவும் அழகாக விளங்குகின்றன.

வாடகைக்கு வீடுகள் கிடைப்பது கஷ்டம். ஜனங்கள் வசதியாக தங்குவதற்கு ரெயில்வே ஸ்டேஷனுக்கு அருகே 'ஸ்ரீ ராஜலெக்ஷ்மி விலாஸ் என்னும் ஹோட்டலும், மேல வீதியில் 'ஸ்ரீ வர்த்தனி பவன்' என்னும் ஹோட்டலும் லால்கான் தெருவில் 'ஆனந்தா லாட்ஜ்' என்றஹோட்டலும் இருக்கின்றன. அறைகள் இருக்கின்றன. ஊர் எங்கும் நல்ல சாப்பாடு, காபி ஹோட்டல்கள் பல இருக்கின்றன. கோயிலுக்குள் பிரசாதங்கள் எப்போதும் கிடைக்கும். நீராட பாலமான் ஓடை, ஞானப்பிரகாசம், தச்சன் குளம், ஓம குளம், ஆயிகுளம் முதலிய நீர் நிலையங்கள் இருக்கின்றன.

**பாங்கிகள்:** தெற்கு வீதியில் இந்தியன் பாங்கும், இண்டோ கமர்ஷியல் பாங்கும், மேலவீதியில் செண்ட்ரல் பாங்கும். தஞ்சாவூர் பர்மனெண்டு பாங்கு லிமிடெட்டும்

சின்னகாஜியார்தெருவில் ஸ்டேட்பாங்கும் வடக்கு வீதியில் அர்பன் பாங்கும் இருக்கின்றன.

**சத்திரங்கள், மடங்கள்:** சிதம்பரத்தில் பல சத்திரங்களும், மடங்களும் இருக்கின்றன. "அன்னம் பாலிக்கும் பொன்னம்பல" மாதலால் போசனத்திற்கு அந்நகரில் ஒரு குறைவும் இல்லை. தெற்கு வீதியிலுள்ள நாட்டுக்கோட்டை செட்டியார் சத்திரமே இந்நகரின் கண்ணுள்ள பெரிய சத்திரமாகும். இங்கே பிராமணர்களுக்குமாத்திரம் எந்தநாளிலும் போஜனம் அளிக்கப்படும் யாத்ரீகர்கள் மூன்று நாள் இங்கே அமுது கொள்ளலாம் என்பது விதி. அதே வீதி கீழ்கோடியில் பல்லவராயபட்டு சத்திரமும், தெற்கு சன்னதியில நாடார் சத்திரமும் கீழவீதியிலும், கீழசன்னதியிலும் சில சத்திரங்களும் வடக்குவீதி, மேலவீதிகளில் சில சத்திரங்களும் இருக்கின்றன. கீழவீதியில் நாட்டுக்கோட்டை செட்டியார்களுக்குச் சொந்தமான நகர விடுதி ஒன்று இருக்கிறது. மடங்களில் சிறந்தது அறுபத்துமூவர் மடம் என்பது. இது தெற்கு வீதியிலுள்ளது. இன்னும் ஈசானிய மடம் வடக்குவீதிப் பக்கத்திலும், அறுபத்து மூவர் குருபூஜை மடம், ஆறுநாட்டு வேளாளர் மடம் கமலீஸ்வரன் கோயில் தெருவிலும், மௌனசாமி மடம் ஆயிகுளம் சமீபத்திலும் பொன்னம்பலஸ்வாமி மடம், நால்வர் படம், பரஞ்சோதி மடம், இன்னும் சில மடங்கள் மன்னார் குடி ரோட்டுத் தெருவிலும், மேலமடம் அனந்தீஸ்வரன் கோயில் தெருவிலும் இருக்கின்றன.

இவைகளில் பொன்னம்பல ஸ்வாமி மடம் நிறைந்த ஐவேஜியையுடையது. யாத்ரீகர்களுக்கும், அடியார்

களுக்கும் சாதாரண காலத்திலும் உற்சவ காலத்திலும் இங்கே அன்னம் வழங்கப்படும்.

இன்னும் குரு நமசிவாயர் மடம், அம்பலத்தாடுவார் மடம், உமாபதி சிவாசாரியார் மடம் முதலிய மடங்களும் இருக்கின்றன. முதலில் கூறிய இரு மடங்களும் ஊருக்கு வடக்கே தில்லையம்மன் கோவிலுக்குப் போகும் பாதையிலே அம்பலத்தாடி மடத்தருகில் உள்ளன. மாணிக்கவாசக சுவாமிகள் சிதம்பரத்தில் இருந்தபோது குரு நமச்சிவாயதேவர் மடத்தில்தான் வாசம் செய்தனராம். இதற்கடுத்துள்ள அம்பலத்தாடுவார் மடத்தில் மணிவாசகப்பெருமான் திருவாய் மலர்ந்தருள இறைவன தமது திருக்கரத்தினுல் எழுதப்பட்ட திருவாசகத் திரு ஏடுகள் பூஜையிலிருக்கின்றதாம். உமாபதிசிவாச்சாரியார் மடம் இரயிலடிக்குக் கீழ்புறத்தில் உள்ளது. அவருக்குச் சிறு கோயிலும் உற்சவ மூர்த்தியும் இருக்கின்றன.

**பள்ளிக்கூடங்கள் :** பச்சையப்பன் ஹைஸ்கூலும், நாவலர் சைவப்பிரகாச வித்யாசாலையும். ராமசாமி செட்டியார் உயர்நிலைப்பள்ளியும், முனிசிபல் நிர்வாகத்திற் குட்பட்டசில ஆண் பெண் பாடசாலைகளும் இருக்கின்றன. வடக்கு வீதியில் இலவச வாசகசாலை ஒன்று இருக்கிறது.

**நந்தனர் பள்ளிக்கூடம்:** இவ்வூரில் ஓமகுளம் சமீபத்தில் கல்வி கேள்விகளில் சிறந்தவரும், ஹரிஜன குலதிலகருமான சுவாமி சகஜானந்தா எம். எல். ஏ., அவர்களின் பெருமுயற்சியால் ஆதித்திராவிட சிறுவர், சிறுமியர்கள் படிக்க பாடசாலையும், அவர்கள் வழிபட ஒரு சிறு ஆலயமும் மற்றும் ஹரிஜன வசதிக்காக அவர்களுக்கு

வேண்டிய சௌகரியங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. திருவிழாக் காலத்தில் இந்த ஹரிஜனங்கள் நான்கு மாட வீதிகளில் நடராஜப்பெருமான் படத்துடனும், தேவார கோஷ்டியுடனும் சுற்றிவருவது குறிப்பிடத் தக்கதாகும். மேற்படி சுவாமியவர்கள் சலியா உழைப்பினாலும் தீவிர ஊக்கத்தாலும் பள்ளிக்கூடம் உயர்நிலைப்பள்ளியாக விளங்குகிறது. 1916-ம் வருடத்திலிருந்து நாளதுவரை இம்மாகாணத்திலுள்ள தமிழ் நாட்டைச்சேர்ந்த 10000 ஹரிஜன மாணவ மாணவிகளுக்குமேல் கல்வி பயின்றிருக்கின்றனர்.

**ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாசாலை:** ஊருக்குப் தென்மேற்குப் புறத்தில் மேற்படி கல்விச்சாலை சிதம்பரம் தருமபூஷணம் காசுக்கடை இரத்தினசாமி செட்டியார் அவர்களின் பெரும் பொருளுதவியாலே அழகாக நிறுவப் பட்டு பூரண உயர்நிலைப் பள்ளியாக நல்ல முறையிலே நடந்து வருகிறது.

**பாடசாலை:** நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் ஆதரவில் தேவார பாடசாலைகளும் வேதபாடசாலைகளும், நகரில் இருக்கின்றன. மேலவீதியில் தமிழ் மொழி வல்லுனரும், சங்கீத வித்வானும், வைதிகநெறியில் நிற்ப வரும், மஹா பக்த சிகாமணியுமான மகா-௱-௱ஸ்ரீ இலக்ஷ்மண ஐயர் அவர்கள் தலைமையிலும் மேற்பார்வை யிலும் ஒரு தேவாரப்பாடசாலை இருக்கின்றது. இங்கே யுள்ள சைவமணங்கமழும் தமிழ்ப்பிள்ளைகளும், அந்தணச் சிறுவர்களும் ஒருங்கு சேர்ந்து இன்னிசையோடு தினந்தோறும் திருக்கோயிலில் தேவாரம் பாடும் நேர்மையும், திருவிழாக்காலங்களில் பஞ்ச மூர்த்திகளுடன் வந்து வீதிகளில் அங்கங்கே நின்றுபாடும் சிறப்பும் கவனிக்

தக்கது. இதேபோல் முதலியார் பாடசாலை என்ற பெயருடன் ஒரு தேவாரபாடசாலை செங்கழுநீர்பிள்ளையார் கோயில் தெருவில் இருக்கிறது. இதன் 50-வது ஆண்டு விழா வெகு விமரிசையாக ஜய-ஸு ஐப்பசி-மீ 7, 8, 9 தேதிகளில் நடைபெற்றது. மற்றும் வடக்கு வீதியில் ஒரு சமஸ்கிருத பாடசாலையும், கீழவீதியில் சங்கீத பாடசாலை ஒன்றும் இருக்கிறது.

**ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்தப் பாடசாலை:** மாலை கட்டித் தெருவிலுள்ளது. இதில் புலவர் புகுநிலை வகுப்பு நடைபெறுகிறது. காரைக்குடி, ராம. சொ. ஐயா அவர்களால் 20 ஆண்டுகளுக்கு முன் திறக்கப்பெற்றுள்ளது. ஓராண்டளவு சைவ மாணவர் பதின்மருக்கு இலவச கல்வியும் உணவும் அளிக்கப்பெறுகிறது. ஆசிரியர் வித்வான ப. அ. கிருஷ்ணஸ்வாமிப் பிள்ளை.

**சிவஞானத் திருத்தளி:** இது செங்கழுநீர்பிள்ளையார் கோயில் தெருவில் ஸ்ரீ செப்பறைச் சுவாமிகளால் நிறுவப்பெற்றது. இதில் வைதிக சைவர்கள் பூஜாமாடமும் ஸ்ரீ முத்துக்குமாரசாமி நூல் நிலையமும் உண்டு.

**தொழிற்சாலைகள்:** கள்ளிக்காட்டுமடத் தெருவில் பஸ் ஸ்டாண்டு சமீபத்தில் தையல் வேலைக்கும், பின்னல் வேலைக்கும் உபயோகப்படக்கூடிய நூல்கண்டுகள் தயாரிக்கும் கம்பெனி ஒன்றும், அதனை அடுத்த கீழ்ப்புறத்தில் காகித கவர்கள் செய்யும் கம்பெனி ஒன்றும், பல நெருப்புப் பெட்டித் தொழிற்சாலைகளும், அச்சகங்களும் ரைஸ்மில்களும், மாவுமில் முதலியனவுமிருக்கின்றன.

**பொழுதுபோக்குமிடங்கள்:** ரயிலடிக்குச் சமீபத்தில் வடுகநாதன் டாக்கீஸ் என்கிற ஒரு பெர்மெனண்ட்

சினிமா தியேட்டரும், நடராஜா டாக்கீஸ் தியேட்டரும் ஊருக்கு வடக்கே ஒரு டெம்பரரி தியேட்டருர் இருக்கின்றன. தவிர காந்தி பார்க்கும், பொதுமக்கள் கேட்டு மகிழ ரேடியோ நிலையங்களும் இருக்கின்றன. பாலமானுக்கருகில் அண்ணுமலை டவுன் ஹால் ஒன்றுண்டு. இங்கே அங்கத்தினர்களுக்கு டென்னிஸ் பந்து விளையாட்டு முதலிய வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது பெரும்பாலும் பொதுக்கூட்டங்கள் இங்கே நடைபெறும்.

## திருப்பனந்தாள் மடம்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் அவர்களின் நன்கொடையால், சீழகோபுரத்தில் "ஒரு சிவ சிவ" ஒலிமண்டபம் நிறுவப்பெற்று, நாடோறும் காலை மாலை தேவார திருவாசகங்கள் பாடப்பட்டு வருகின்றன.

ஃ ஃ ஃ ஃ

## சிதம்பர க்ஷேத்திரம்

சிவ க்ஷேத்திரங்கள் பலவற்றுள் மிகச் சிறந்து விளங்குவது சிதம்பரமேயாம் "பிரமாண்டம்" பிரமபுரமெனவும், இப்பிரமாண்டத்தினுள்ளேயிருக்கும் தில்லைவனம் புண்டரீகவீடெனவும் தில்லைவனத்திலிருக்கும் ஆகாசம் பராசக்தியாகிய திருசிற்றம்பலமெனவும் அத்திருச்சிற்றம்பலத்திலே நிருத்தஞ் செய்யும் பரப்பிரமசிவம் அதிருக்கும் சித்தெனவும் சொல்லப்படும். இவ்வாசகம் பூதாகாசம் போற்சடமாகாது சித்தேயாம். ஆதலால், சிதம்பரமெனப்படும்பஞ்சபௌதிகலிங்கஸ்தலங்களுள்ளே ஆகாசஸ்தலமாக விளங்குவதும் இதுவே. இதற்கு தில்லைவனம் வியாக்ரபுரம், புண்டரிகபுரம் எனப் பலபெயர்கள் உண்டு. திருவாரூரில் பிறத்தல் புண்ணியம், காசியில் இறத்தல் புண்ணியம்'

சிதம்பரத்தில் இருத்தல் (ஈசனை தரிசித்தல்) புண்ணியம் என்பர் பெரியோர். ஆகவே மிகவும் சுலபமாய் முத்தியளிக்கக் கூடியது இச்சிதம்பர க்ஷேத்திரமே.

விராட்புருடனுக்கு இதய ஸ்தானமாய் விளங்குவது இத்திவ்ய ஸ்தலம். ஏனைய இடங்களிலுள்ள தெய்வங்களெல்லாம், இந்த ஹ்ருதயஸ்தானமாகிய சிதம்பரத்திலே ஒடுங்கி மீண்டும் அந்தஇடங்களுக்கு இரவில் அந்தந்த கலைகள் செல்லும் என்பது ஆன்றோர் துணிபு. இதனாலேதான்,இங்கே அர்த்தஜாம தரிசனம் அதிவிசேஷமெனப்படும். நமது ஊனக் கண்களுக்குப் புலப்படாத சித்தர், முனிவர் முதலாயினோரும் இந்த தரிசனத்தைக் காண நாலாபக்கங்களிலிருந்தும் வருவர்.

சைவ, சமயாசார்யர்களுள், ஒருவரான. தேனினுமினிய திருவாசகத்தை நமக்களித்தருளிய ஒப்புயர்வில்லா மணிவாசகப் பெருமான், பக்தி வெள்ளம் பெருகிப் பொங்கித் ததும்ப, ஆடிப்பாடி இறுதியில் பொன்னம்பலவாணன் அருளைப் பெற்று ஈசனோடு கலந்ததும் இத்தலத்திலேயாம், மற்றும் மூவரெனப்படும் அப்பர், சம்பந்தர், சுந்தரர் இவர்களால் பாடப்பெற்ற ஸ்தலமும் இதுவே. புலையனை நந்தன், பூர்வ புண்ணியவசத்தினால் புனிதனாகி சிவத்துடன் கலந்த புண்ணிய க்ஷேத்திரமும் இதுவே. திருநீலகண்டர் முதலிய சில நாயன்மார்கள் முக்தியடைந்ததும் இங்கேதான், வியாக்கிரபாதர் பதஞ்சலி உபமன்யு, வியாசர், சௌனகர், ஜைமினி சூதர் முதலானவர்களும் இப்புண்ணிய பூமியில் தவமியற்றி இறைவனை வழிபட்டுப் பெரும்பேறடைந்துள்ளனர்.

மாணிக்கவாசகர் புத்தரை வாதில் வென்று ஊமைப் பெண்ணை பேசவைத்ததும் இத்தலத்திலேயாம். தேவார ஏடுகள் முதன் முதலில் இங்குதான், உச்சிப் பிள்ளையார் காண்பிக்க, ஓர் அறையிலிருந்து கண்டெடுக்கப்பட்டன, சேக்கிழார் பெருமான் பெரிய புராணம் பாட நடராஜப் பெருமானை அடியெடுத்துக் கொடுக்குமாறு வேண்டியதும் இத்தலத்தில்தான்.

"அடிகளேயுன தடியர் சீரடி யேனுரைத்திட வடியெடுத்
திடர் கெடத்தரு வாயெனத்திரு வருளை யெண்ணி
யிறைஞ்சினார்"

அலைபுனற் பகிரதி நதிச்சடை யாடவாடர வாடநின்
றிலகுமன் றினி லாடுவார்திரு வருளினால சரீரவாக்
குல கெலாமென வடியெடுத்துரை செய்த பேரொலி
யோசைமிக்
கிலகுசீரடியார் செவிப்புலத் தெங்குமாகி நிறைந்ததால்"

இன்னும், பெற்றான் சாம்பானுக்குத் தீக்ஷை செய்யுமாறு, ஸ்ரீ நடராஜப் பெருமானே, உமாபதி சிவத்தின் இல்லத்திற்கு ஓலையனுப்பி அன்னான் முக்தி பெற்றதும் இங்கேதான்.

"அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங் குடியார்க்
கெழுதிய கைச்சீட்டு—பயின் மிசைப் பெற்றான்
சாம்பானுக்குப் பேதமற தீக்கை செய்து முத்தி
கொடுக்குமுறை"

இத்தகைய திவ்ய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருப்பவர்தான், நம் எல்லோரையும் ஒருங்கே ஆட்கொள்ளவல்ல ஸ்ரீமந் நடராஜ மூர்த்தியாவர். இப்பெருமான், சிற்சபையிலே, ஒரு திருமுகத்தோடு, புன்முறுவல் பூத்த வண்ணம் தமது ஜடாபாரத்திலே மூன்றாம் பிறைச் சந்திரனும், கங்கையும் தரித்தவராக வீற்றிருக்கும் கோலத்தை என்னெனக் கூறுவது! ஒரு கரத்தில் உடுக்கை, ஒரு கரத்தில் தீ, ஒரு கரம் அஞ்சல் என்னும் பாவனையுடன் கூடியது, மற்றொரு கரம் தம்மை, நாம் வழிபட்டுய்யத் தமது திருவடியைக் காட்டுவது, ஒரு கால் முயலகன்மீது - மற்றொரு கால் தூக்கிய பாதம், இதுவே ஆடியபாதம், இதுவே குஞ்சித பாதம், எல்லோரையும் இரட்சிக்கும் இத்தகைய சிங்கார கோலத்துடன் சத்தி சிவகாமி சமேதனாய் விளங்கும் சிற்சபேசனைக் கண்டார் சித்தம் பரவசமாவர்; வணங்கினோர் பரகதி எய்துவர்.

இன்னும் சிற்சபேசனாகிய நடராஜ மூர்த்தியின் அருட்பெரும் வடிவம் இருக்குந் தன்மையைக் குறித்து, அப்பர் சுவாமிகள் வெகு அழகாய் ஒரு பாசுரத்தில் கூறியிருக்கின்றனர். தன்னைத் தரிசிக்கவேண்டும் என்கிற அவாவினால் வருகின்ற அன்பர்களைத் தயவுடன் வரவேற்று முகமலர்ச்சியுடன் "என்று வந்தாய்" என முகமன்கூறி விசாரிப்பது போல் நடராஜர் வடிவம் விளங்குகின்றதென்பார்.

"ஒன்றியிருந்து நினைமின்க ளுந்தமக் கூனமில்லை
சன்றிய காலனைக் காலாற்கடிந்தா னடியவர்க்காய்ச்
சென்று தொழுமின்கள் தில்லையுட்சிற்றம்பலத்து நட்டம்
என்று வந்தாயென்றும் எம்பெருமான் திருக்குறிப்பே"

இன்னும் அப்பெரியார் இறைவனைக் குறித்து

"திருவுடையந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற்றம்பலவன்
திருவடியைக்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்ப
தென்னே"

என்றும் பாடியுள்ளார். இவர்காலத்திலே யிருந்த திருஞான சம்பந்தப் பெருமானும் செல்வத்துட் சிறந்த செல்வம் ஸ்ரீ நடராஜன் திருவடியைப் பணிந்தேத்துதலே என்னும் பொருள்பட

"செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர்வாழ் தில்லைச் சிற்றம்பல மேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே"

எனப்பாடியிருக்கின்றனர். இன்னும் ஆலால சுந்தரரும் மாணிக்கவாசகரும் இறைவனைப் பாடியுள்ள பாடல்களை நாம் படிப்போமாயின் நம்மையும் அறியாமல் ஆனந்த பாஷ்பம் நமது கண்களில் பெருகும் என்பதற்கு ஐயமில்லை. சமீப காலத்தில் பிறந்து இருந்து, மறைந்துலாவும் திரு அருட்பிரகாச வள்ளல் என்னும் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் நமது நடராஜப் பெருமான் மீது பாடியுள்ள மிகவும் உருக்கமான பாடல்களைப் பார்த்தாலும் இனிக்கும், படித்தாலும் இனிக்கும், படிக்கப் பக்கநின்று கேட்டாலும் இனிக்கும்; பரிந்து உள்ளம் உணர்ந்தாலும் இனிக்கும்.

## கோபுரங்கள்.

எடுத்த எடுப்பிலே நான்கு உன்னத கோபுரங்கள், நம் கண்களுக்கு முன் கம்பீரமான தோற்றத்தை யளிக்கின்றன. இரண்டாம் குலோத்துங்க சோழ

னுல் (A. D. 1133-50ல்) கட்டப்பட்ட கீழகோபுரமும், பல்லவ சொக்கசியனுல் (A. D. 1232-43ல்) நிறுவப்பட்ட தெற்கு கோபுரமும், ஜடவர்மசுந்தரனுல் (A. D. 1251-1270ல்) எழுப்பப்பட்ட மேல கோபுரமும், கிருஷ்ணதேவ ராயனுல் (A. D. 1509-30ல்) நிர்மாணஞ் செய்யப்பட்ட வடக்கு கோபுரமும் அவைகளில் காணப்படும், புராதன நடனக் கலையைப் பரிபூரணமாக விளக்கும் பலவித நடனங்க ளடங்கிய சித்திரங்களும், புராண சம்பந்தமான கதைகளைப் போதிக்கும் பதுமைகளும், பார்க்கப் பார்க்க நம்மைப் பரமானந்த சாகரத்தில் மூழ்கச்செய்யும்.

## கோயிலின் அமைப்பு.

இவ்விதமான உயர்ந்த சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த நான்கு கோபுரங்களின் நடுவே ஒப்புயர்வறற சிதம்பர தேவாலயம் அமைந்துள்ளது.

இங்கே பஞ்ச கோசங்களையும் உணர்த்தும் ஐந்து சபைகள், தெய்வத்தன்மை பொருந்தியன. (1) இராஜ சபை (ஆயிரக்கால் மண்டபம் — அன்னமய சோசம்) (2) தேவசபை (பேரம்பலம் — பிராணமய கோசம்) (3) நிருத்தசபை (மனோமய கோசம்) (4) கனகசபை (விஞ்ஞானமய கோசம்) (5) சிற்சபை (ஆனந்தமயகோசம்).

## சபைகளின் விளக்கம்.

**சிற்சபை:—** இங்கேதான் ஸ்ரீமந் நடராஜமூர்த்தி ஆடியபாத கோலத்துடன் வீற்றிருக்கின்றார். வலப்புறத்தே அரூபமான சிதம்பர ரகசிய ஸ்தானம், தங்க வில்வதள அடையாளத்துடன் இருக்கிறது. இடப் புறத்தில் சிவகாம சுந்தரியும் அவ்வம்மையார் பக்கத்தில் சுவர்ண பைரவரும், நித்யோற்சவ மூர்த்தி

ஸ்ரீபலிநாதரும் சுவாமி திருவடியின்கீழ் ஸ்படிக லிங்கமாகிய சந்திரமௌளீஸ்வரரும், ரத்னசபாபதியாகிய மரகத மூர்த்தியும் விளங்குகின்றனர்—வலது பக்கத்திலே சதாசிவமூர்த்தி வடிவமும் அதன் புறத்தே ஸ்ரீநடராஜர் திருவடி — தங்கப்பாதுகையும் உள்ளன.

மேலே கூறப்பட்ட ஸ்படிகலிங்கத்திற்குத்தான் — தினந்தோறும் ஆறுகால அபிஷேக ஆராதனை பூஜை நடைபெறுவது. இரத்ன சபாபதிக்கு ஒவ்வொரு நாளிலும் இரண்டாம் கால பூஜை சமயத்தில் மாத்திரம் பிரத்யேக அபிஷேக ஆராதனை நடக்கும். இது மணிமயமானதால், தீபாராதனை சமயம் ஒளிமயமாய் விளங்குவதை அன்பர்கள் தரிசித்து உள்ளம் பூரிப்பர்.

சிற்சபையிலுள்ள ஐந்து வெள்ளிப்படிகளும், ந, ம, சி, வ, ய, என்னும் பஞ்சாக்ஷரங்களைக் குறிக்கும்; தத்துவங்களாகிய தொண்ணூற்றாறும், தொண்ணூற்றாறு பல சணிகளாகயிருக்கின்றன. நடுவிலிருக்கும் நான்கு தம்பங்கள், நான்கு வேதங்களாகும். அவைகளைச்சுற்றியுள்ள இருபத்தெட்டு மாத்தம்பங்கள் இருபத்தெட்டு ஆகமங்கள் எனப்படும். இவைகளுள் அடங்கிய இடத்தை சுத்தவித்தையெனவும் இரகசியம் என்று சொல்லப்படும் ஸ்தானத்திலிருந்து ஸ்ரீமந் நடராஜமூர்த்தி எழுந்தருளியிருக்கும் பிரதேசம் வரையிலுள்ள பீடத்தைப் பிரணவபீடமெனவும் சொல்லப்படும். மேலேயுள்ள விமானம் தங்கமயமான ஓடுகளால் வேயப்பட்டுள்ளது. அதன் உச்சியில் காணப்படும் ஒன்பது கவசங்களும், வாமை முதலிய நவசக்திகளாம். அதிலுள்ள கைமரங்கள் 64-ம 64-கலைகளாம். செப்போடுகள் 21600-ம் நாம்

DONATED BY
Thiru. A. THANGAVELU. ...
RETD. TELEGRAPH MASTER
... OFFICE, CHENNAI

ஒவ்வொரு நாளும் விடும் சுவாசங்களைக் குறிக்கும். ஆணிகள் 72000மும் அச்சுவாச சஞ்சார ஆதாரமான எழுபத்திராயிர நாடிகளாம்.

**கனகசபை:**— மேற்படி சிற்சபையைத் தொடர்ந்து அமைக்கப்பட்டுள்ளது. பதினெண் மகாபுராணங்களையே பதினெண் கம்பங்களாகப் பெற்றதுமாய் மணிபூரகத்தானமுமாய் விளங்குகின்றது. இங்கே தான் ஸ்படிகலிங்கத்திற்கு நித்ய ஆறுகால அபிஷேகாதிகளும், ஸ்ரீ நடராஜமூர்த்தி — சிவகாம சுந்தரி இவர்களின் மகாபிஷேகமும் நடைபெறும், இதன் மேல் விமானம் தாம்பரத் தகடுகளாலாயது.

**நிருத்த சபை:**— சிற்சபைக் கெதிரே, துவஜ ஸ்தம்பத்திற்குச் சிறிது தெற்கே. இருக்கிறது. இது மிக மிகப் புராதனமான கட்டிடம்: காளியுடன் நர்த்தனம் ஆடிய ஊர்த்வ தாண்டவ மூர்த்தியின் சன்னிதானத்துடன் கூடியது: அருகில், சரப மூர்த்தி வீற்றிருக்கிறார் — இரணியனைச் சம்ஹாரம் செய்த மகாவிஷ்ணுவின் இறுமாப்பையும் உக்கிரத்தையும் அடக்க இறைவன் கொண்ட மூவுருவக்கோலம்— பக்ஷி. மிருகம் — மானுஷம். இம்மண்டபத்தில் நடனக் கலையின் சித்திரங்கள் நிறைந்துள்ளன. பண்டைக்கால சிற்பிகளின் கைத்திறத்தை நன்றாக விளக்கி, மேனாட்டார்கள் பலரும் மெச்சிப் புகழ, அவர்களுக்கு ஒரு பெரும் கலை விருந்தளிப்பதாகவும் இருக்கிறது—இந்நிருத்த சபையை நேரிற் கண்டு பின் வருமாறு தமது புத்தகத்தில் (History of Indian and Eastcrn arcihtecture) சரித்திரப் பேராசிரியராகிய பெர்குஸன் (Fergusson) எழுதியிருக்கிறார்.

"A most precious piece of work-manship in sculpture and as containing dancing figures"

more graceful and more elegantly executed than any other of their class so far as I know in Southern India.

**தேவ சபை:—** இது சிற்சபைக்குச் சிறிது கீழ்புறத்தில் இருக்கிறது. பேரம்பலம் என்றும் இதற்குப் பெயருண்டு. தற்காலம் பொது தீக்ஷிதர்களின் திருவாகக் கூட்டம் கூடுகின்ற சபையாக விளங்குகிறது — உற்சவ மூர்த்திகள் இருக்குமிடம்.

**இராஜ சபை:—** (ஆயிரக்கால் மண்டபம்) இதற்கு தேவாசிரிய மண்டபம் என்றும் பெயர். சேக்கிழார் பெரிய புராணம் இயற்றி அரங்கேற்றப்பட்ட இடம். இந்த விழாவைக் கொண்டாடும் நிமித்தமாகவே மூன்றாம் குலோத்துங்க சோழனால் (1178—1216) இது நிர்மாணம் செய்யப்பட்டது.

## நடன சபைகளும் நடன தத்துவமும்

1. திருவாலங்காடு, 2. சிதம்பரம், 3. மதுரை, 4. திருநெல்வேலி, 5. திருக்குற்றாலம். இந்த இடங்களிலுள்ள நடன சபைகளுக்கு முறையே இரத்தின சபை, பொற்சபை, வெள்ளிசபை, தாமிரசபை, சித்திரசபை, என்று பெயர்கள் வழங்கப்படும். இந்த ஐந்து க்ஷேத்திரங்களையும் தரிசித்து ஈசனை வழிபடுவோர் பிறவா நிலையையடைந்து இன்புறுவர்.

**தத்துவம்:—** சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோபவம், அனுக்ரஹம் ஆகிய பஞ்ச கிருத்யங்களும் எம்பெருமானது ஆனந்த நடனமாகும். இவை பரமசிவத்தின் தாண்டவ ஸ்வரூபம். மாயாபாசத்தால் கட்டுண்டு மயங்கி யுழலும் மக்கள், தங்களுடைய மகத்தான சச்சிதானந்த நிலையை

யடைவதற்கு இம்மகா மகிமை தங்கிய ஆனந்தத் தாண்டவ தரிசனமே ஒரு அரிய பெரிய சாதனமாகும்.

## உருவ விளக்கம்

ஸ்ரீமந் நடராஜமூர்த்தியின் வலது கரத்திலே இருக்கப் பட்ட உடுக்கையின் சப்தத்தினாலே, அவர் உலகத்தை எப்படி வேண்டுமானாலும் ஆட்டிவைக்கலாம். "ஆட்டு வித்தால் யாரொருவர் ஆடாதாரே" என்ற குறிப்பை உணர்த்துகிறது. பக்கத்திலேயுள்ள மான் மனதைக் குறிக் கிறது. "தாவுமான்" எனப் பெரியோர்களும் மனதைக் கூறியுள்ளனர். புலித்தோல் அகங்காரத்தை அறிவுறுத்து கின்றது, அதை அழிக்க நடராஜரே ஆற்றலுடையவர்; சிரசிலேயுள்ள கங்கை சிற்சத்தி (ஞானம்) யைக் குறிக்கிறது. சந்திரன், குளிர்ச்சியையும் பிரகாசத்தையும் குறிப்பிடு கின்றது. காலில் மிதிக்கப்பட்டுள்ள முயலகன்தான் மகா மாயை. வலதுகரம் சாந்தியைக் காட்டுகின்றது. இடக் கையிலுள்ள நெருப்பு, ஆத்ம ஜோதியைக் குறிக்கின்றது.

## யாத்ரீகர்கள் சிதம்பர தரிசனம் செய்யவேண்டிய முறை

அதிகாலையிலெழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு திருக்கோவிலுக்குட் புகுந்து சிவகங்கை தீர்த்தத் திலே நீராடி, ஜபதபங்களைச்செய்து முடித்து முதலாவதாக தெற்கு கோபுரவாயில் மேல்பாகத்தில் உள்ள மகாகணபதி முக்குருணியரிசிப் பிள்ளையாரையும், மேல் கோபுரவாயில் சமீபத்திலுள்ள கற்பக விநாயகரையும், அப்படியே வள்ளி தேவசேனா சமேத முருகக் கடவுளையும் வழிபட்டு உள்ளே பிரவேசித்து படிகட்டு வழியேசென்று உச்சிப்பிள்ளையாரை வணங்கி பிரதட்சணமாக நால்வரையும் வடக்கு பிரகாரத்தி லுள்ள உச்சிஷ்ட பிள்ளையாரையும் தக்ஷிணாமூர்த்தியையும்,

அறுபத்துமூவரையும் பணிந்து மூலஸ்தானத்தையும் தேவியையும் சண்டேசுரரையும் வழிபடல் வேண்டும். பிறகு அப்படியே பேரம்பலத்தையும், நவக்கிரகாதிகளையும், சனீஸ்வர பகவானையும் தரிசித்துக்கொண்டே, சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமந் நடராஜமூர்த்தி எழுந்தருளியிருக்கும் கனகசபைக்குள் சென்று, நடராஜப்பெருமான் சன்னதி முன்னின்று, கரங்கூப்பி வணங்கிக்கும்பிட்டு கண்ணாரத்தரிசித்து வாயாரப் பாடி; நெஞ்சம் நெக்நெக்குருக, அங்கம் மயிர்க்கூச்செறிய, இரு கண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் சொரிய மெய் மறந்து சிறிதுநேரம் தியானத்திலிருக்கவேண்டும். பின்னர் வலமாக அங்குள்ள நிருத்த விநாயகரையும், இலங்கோற்பவ மூர்த்தியையும், ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத சுப்பிரமண்யரையும், பிக்ஷாடன மூர்த்தியையும், காளபைரவரையும், சூரிய சந்திரனையும் பிரம்ம சண்டேஸ்வரரையும் வணங்கி, அருகிலிருக்கும் பரமானந்த கூபத்தையும் தரிசித்து மீண்டும் நடராஜப்பெருமானையும், சிவகாமியம்மனையும் வணங்கித் துதித்து விடைபெற்று அருகிலேயுள்ள, ஸ்ரீ மகாலெக்ஷ்மி சமேதராக பள்ளிகொண்டிருக்கும் மகாவிஷ்ணு சன்னிதானத்தையடைந்து அந்த கோவிந்தராஜப் பெருமானை வணங்கி அப்படியே துவஜஸ்தம்பத்தைக் கும்பிட்டு நேரேசானும் நிருத்தசபைக்குச் சென்று ஊர்த்வ தாண்டவ மூர்த்தியையும், சரபமூர்த்தியையும் வணங்கி மேல்புறம் வீற்றிருக்கும், புண்டரீகவல்லித் தாயாரையும் (லக்ஷ்மி) தரிசித்து எதிரேயுள்ள கம்பத்தமர் பழநியாண்டவரையும் வழிபட்டுப் பின்னர் வந்தவழியே படிக்கட்டுகள் ஏறி வெளியேவந்து வடக்கே திரும்பி அம்மன் கோயிலுக்குச் சென்று அம்பாளைப் பணிந்து வெளிவந்து அதன் பக்கத்திலுள்ள துர்க்காதேவி சன்னதியை யடைந்து துதித்துப்

பிறகு நேரே பாண்டியநாயகம் கோயில் சென்று வள்ளி தெய்வயானையுடன் கூடி விளங்கும் ஆறுமுகஸ்வாமியை வழி பட்டு அங்கே மண்டபத்தில் வெகு அழகாகத் தீட்டப்பட்ட கந்த புராண வரலாற்றின் சித்திரங்களைக் கண்டு களித்து வெளியே வந்து அருகில் கீழ்ப்புறம் காணப்படும் நவலிங்கக் கோயிலையும் வணங்கிச்சென்று ஆயிரக்கால் மண்டபத்தை யும் கண்டு மகிழ்ந்து அங்கே சின்னேரம் அமர்ந்து கைவச முள்ள தேங்காய் வாழைப்பழம் முதலிய பிரசாதங்களைச் சாப்பிட்டு ஒருவாறு சிறிது களைப்பாறலாம். ஊருக்கு மேற்கேயுள்ள இளமையாக்கினர் கோயிலையும் மேலவீதியி லுள்ள இராமர் கோயிலையும் அதன் பக்கத்திலுள்ள சிறை மீட்ட விநாயகர் ஆலயத்தையும் அப்படியே வடக்கேயுள்ள தில்லையம்மன் கோயிலையும் அடைந்து அங்குள்ள தில்லை யம்மனையும், தில்லைக்காளியையும் வழிபட்டு, பிறகு வடக்கு சந்நதியில் எழுந்தருளியிருக்கும் (9-6-55)ல் கும்பாபிஷேகம் நடைபெற்ற திருப்பணி பிள்ளையாரைப் பணிந்து வீதி வலம்வந்து கீழவீதி தேரடிப் பிள்ளையாரையும் வணங்குக. இவ்விதம் நித்ய வழிபாடாற்றி இத் திவ்யஸ்தலத்தில் மூன்று தினங்களாயினும் வாசம் செய்தல் சாலவும் நன்று.

## கம்பத்தமர் கந்தன்.

துவஜ ஸ்தம்பத்தின மேல் புறத்திலுள்ள இந்த சந்நிதானம் மகாமகிமை தங்கியது இங்கே பழநி தண்டாயுத பாணி கோல, பாலசுப்பிரமணியக் கடவுள் கம்பத்தில் காட்சியளிக்கிறார். கிருத்திகை தினத்தில் விசேஷ பூஜைகள் நடைபெறும். அடிக்கடி காவடிகள் வரும்.

## ஐம்பது ஆண்டுகளாக நாளுக்குநாள் கந்தப்பெருமாள் உருவம் வளர்ந்து வருவது ஒரு அதிசயம்.

## உச்சிப் பிள்ளையார்

மேலகோபுர வாயில் வழியே சென்று கோயிலுக்குள்ளே செல்லும்போதே எதிரில் உயரே இப்பிள்ளையார் எழுந்தருளியிருக்கிறார். இவர்தான் தேவாரத் திருமுறைகள் இருந்த, தமது அருகிலுள்ள அறையைக் காண்பித்தவராம். அபயகுலசேகர சோழ மகாராஜா, நம்பியாண்டார் நம்பிகளைக்கொண்டு அவைகளை எடுக்கச்செய்தனராம். அப்படியே வடபுறக்கோடியில் நால்வர் சந்நிதி காணப்படும். இங்கே மாலையில் தேவாரப் பாடசாலை மாணவர்களால் தேவாரப் பாடல் இசையுடன் பாடப்படும். அதற்கடுத்தாற்போல் வாகன மண்டபம் இருக்கிறது. மூலஸ்தான திருமூலநாதர் சந்நிதிக்குப் போகும்போது இரு விநாயகரையும் தரிசித்து திரும்பி தக்ஷணாமூர்த்தியைப் பணிந்து, அறுபத்து மூவரையும் கும்பிட்டு வலம் வந்து மூலஸ்தான சந்நிதியை அடைந்து சிவபெருமானையும் உமையவளையும் தரிசிக்க.

## நவக்கிரக சனீஸ்வர ஆலயம்.

மூலஸ்தானத்தையும் உமையம்மையையும் தரிசித்துப் பிரதக்ஷணமாக வந்து பேரம்பலத்தையும் வணங்கி அப்படியே பக்கத்திலுள்ள நவக்கிரகங்களையும் சனீஸ்வர பகவானையும் பணிந்து சபைக்குள் சென்று நடராஜ பகவானைத் தரிசிக்கலாம். சபையிலே பிரகாரத்திலுள்ள விநாயகரையும் முருகனையும் பள்ளியறையையும் பிட்சாடன மூர்த்தியையும் பைரவரையும் சூரிய சந்திரர்களையும், சண்டேசுரரையும் அன்பர்கள் தரிசிக்க.

## மூலஸ்தானம்.

சிதம்பர க்ஷேத்திரத்தின் ஸ்தல லிங்கம்தான் திருமூல நாதர் என்பது. இவர் எழுந்தருளியிருக்கும் இடம்தான் மூலஸ்தானம். இதற்கு சென்ற கரவருடத்திலே சித்திரை மாதத்திலே சுக்கிரவார தினத்தன்று காலை 8—9-மணி நேரம் கும்பாபிஷேகம் மங்களகரமாக நடைபெற்றது.

ஆதியிலே சிறுகாடாக இருந்த இந்தப் பிரதேசத்தில் பாதாளத்திலுள்ள ஒரு மலையின் கொழுந்தே இச்சிவலிங்க வடிவமாக, சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளியிருக்கின்றது என்பது புராணக்கதை. ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் நடன தரிசனத்திற்கு முன் வியாக்ரபாதரும் பதஞ்சலியும் நீண்ட காலமாகப் பூசித்து வழிபட்டு வந்தது. இந்த சுவாமி பெயர் திருமூலட்டானேஸ்வரர்; அம்மன் பெயர் உமை யம்மையார். தல விருட்சம் வில்வம்.

## ஊர்த்வ தாண்டவ மூர்த்தியும், சரபமூர்த்தியும்.

துவஜஸ்தம்பத்திற்குத் தேற்கேயுள்ள நிருத்த சபையில் காளியோடு இறைவன் வலது காலைச் சிரமீது தூக்கியபடி நடனம் செய்ததாகக் கூறப்படும் ஊர்த்வ தாண்டவ மூர்த்தியின் உருவம் காணப்படுகின்றது.

இதற்கு அடுத்தாற்போல் சரபமூர்த்தியின் உருவம் இருக்கின்றது. இரணியனைச் சம்ஹாரம் செய்த நரசிம்ம மூர்த்தியின் இறுமாப்பை யடக்க இறைவன்கொண்ட ஓர் பட்சியின் கோலமாகும் இது.

## மகாலக்ஷ்மி சன்னதி.

நிருத்த சபைக்கு மேல்பாகத்தில் கோவிந்தராஜப் பெருமாளின் தேவியான புண்டரீகவல்லித் தாயாரின் சந்நதி இருக்கின்றது. அங்கேயுள்ள அருள் ஒழுகும் உருவத்தை அன்பர்கள் வணங்க அஷ்ட ஐஸ்வரியங்களையும் பெறுவர்.

## ஆனந்தத் தாண்டவ தரிசனம்.

இவ் வரும்பெரும் விஷயத்தை அறிந்துகொள்ள அடியிற்கண்ட இரு முனிவர்களின் வரலாற்றை நாம் எப்படியும் தெரிந்துக்கொள்ளவேண்டியது மிகவும் முக்கியம்.

### வியாக்கிரபாதர்,

வியாக்கிரபாத முனிவர் பிரம ரிஷிகளில் ஒருவராகிய மத்தியந்தனர் என்பவரின் புதல்வர்; சகல வித்தைகளையும் சாங்கோபாங்கமாகக் கற்றுணர்ந்தவர். தந்தையினால் சிவ ரகசியத்தை உபதேசிக்கப் பெற்றவர். தில்லைவனமாகிய சிதம்பரத்திலே ஒரு மரத்தின் கீழ் சிவலிங்கம் ஒன்றை ஸ்தாபித்து திரிகரண சுத்தியுடன் தினந்தோறும் பூசித்து வருபவர். காலையில் எழுந்து புஷ்பங்களைச் சேகரஞ்செய்து மாலைகள் தொடுக்கும் போது சில குற்றமுள்ள மலர்களிருக்கக்கண்டு மனம் கவலையடைந்து இவர் இறைவனை நோக்கி, 'ஈசனே! புஷ்பங்களை நான் விடிந்தபின் எடுக்கையில் அவைகள் வண்டுகளால் பிழைபாடுள்ளவைகளாகக் காணப்படுகின்றன. விடியுமுன் எடுப்போமென்றால் இருட்டில் வழி தெரியவில்லை. புஷ்பங்கள் நிறைந்த மரங்களும் மிக உயரமாயிருப்பதால் ஏறவும் சிரமமாயிருக்கிறது. மேலும்பனியினால் கை கால்கள் வழுக்குகின்றன; என்செய்வேன்' என்று முறையிட்டார். சிவபெருமான் மனமிரங்கி 'முனிவரே! கவலைவேண்டாம். நீர் விருட்சங்களைப்பற்றி ஏறுவதற்குப் புலிக்கால்களும், வழிதெரிந்து நடக்கவும், புஷ்பங்களைப்

பார்த்துப் பறிக்கவும் நகங்களில் கண்களையும் அனுக்கிரகம் செய்தோம்' என்று அசரீரியாய்த் திருவாய் மலர்ந்தருளினர். இதனால்தான் இம் முனிவருக்கு வியாக்கிரபாதர் என்னும் பெயர் ஏற்பட்டது. இவர் இந்த வடிவத்துடனே சிவபூசா விதிகளைக் குறைபாடின்றி இனிது நடத்தி வந்தார். பரமசிவன் அருளையும் பரிபூரணமாகப் பெற்றார்.

இப்படி யிருந்துவரும் நாளில் வியாக்கிரபாதரின் தந்தையாகிய மத்தியந்தனர், வம்ச விருத்தியை உத்தேசித்து வசிட்ட மாமுனிவர் தங்கையை விவாகம் செய்வித்துச் சென்றார். சிலநாள் கழித்து இவருக்கு ஒரு புத்திரச்செல்வம் ஏற்பட்டது. அதனை வசிட்டர் மனைவியாகிய அருந்ததி தனது ஆச்சிரமத்திற்கு எடுத்துச் சென்று காமதேனுவின் பாலை ஊட்டி வளர்த்து வந்தாள். ஒரு சமயம், உபமன்யு என்னும் பெயருடைய இக் குழந்தையை அருந்ததி எடுத்துக்கொண்டு வியாக்கிரபாதரிடம் வந்தாள். அப்போது அவர் இனிய கனிவர்க்கங்கள் முதலியவற்றை மைந்தனுக்குக் கொடுக்க, அவன் எதையும் உண்ணவில்லை. முனிவர் மனங்கலங்கிப் புதல்வனைத் திருமூலத்தானர் சன்னதியில்விட அங்கும் அது பசியால் அழுதவண்ணமிருந்தது. உடனே சிவபெருமான் கருணையினால் திருப்பாற்கடலை வரவழைத்துக்கொடுக்க, குழந்தை உண்டு மகிழ்ந்தது. அதைக்கண்டு இருவரும் ஆனந்த பரவசராய்த் தமது தவநெறியிலே இருந்து காலத்தைக் கழித்து வந்தனர். ஒருநாள் இவர் நிஷ்டையிலிருக்கும் போது, தாருகாவனத்திலே சிவபெருமான் நாற்பத்தெண்ணாயிரம் இருடிகளுக்குத் திருநிருத்தம் செய்

தருளிய காட்சியையறிந்து அதில் ஆசையுடையவராயிருந்தார். அதுமுதல் அந்த திவ்ய நிருத்தக் கோலத்தைத் தனக்கு இங்கே தரிசிப்பித் தருளும்படி பரமசிவனை இடைவிடாது பிரார்த்தித்து வந்தனர்.

## பதஞ்சலி முனிவர்.

ஒரு சமயம் மஹா விஷ்ணுவானவர் ஆதிசேஷ சயனத்திலிருந்து திடீரென நீங்கி சிம்மாசனத்தில் அமர்ந்து ஈஸ்வர தியானத்திலிருந்தார். ஆதிசேஷன் இந்த அதிசயத்தைக் கண்டு திகைத்து நிற்க, பரந்தாமன் அவரைப் பார்த்து "ஆதிசேடனே! நேற்று தாருகாவன ரிஷிகளின் கர்வத்தை நீக்கக்கருதி, தான் ஒரு சித்த பிச்சாடன உருவை வகித்து மிதியடியும், பிக்ஷா பாத்திரமும், விபூதிப் பையும், உத்திராக்ஷ தாவடமும், யஞ்ஞோபவீதமும், கோவணவுடையும் பூண்டு, மிக்க அழகோடு தமருகத்தைக் கையில் தாங்கி, இன்புறு முகத்திலே புன்னகை ததும்ப தன்னைக்கண்ட பெண்களை மோகாந்தகாரத்திலே வீழ்த்தி; என்னை, மோகினி யுருவோடு தன்னைப் பின்பற்றி வருமாறு கட்டளையிட்டு, அவ்வனத்திற்குள் பிரவேசித்தார். நான் எனது சௌந்தர்ய மோகினி வடிவத்தால் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளையும் தவநெறிகளை விடுத்துக் காம விகாரிகளாய்த் திரியுமாறு செய்தேன். அப்போது பரமசிவன் அம்முனி பத்தினிகளிருக்குமிடம் சென்றனர். அவ்வளவிலே அந்த ஸ்திரீகள் அனைவரும் காமத்தால் வாடுவாரும், பிச்சை போடுவாரும், வளை கழலுவாரும், கலை நெகிழ்வாரும், சேரக் கோருவாரும், பின்னே தொடர்வாருமாய் எம்பெருமான் மையலில்

ஈடுபட்டுழன்றனர். இந்த நிலையிலே இவ்வித கருத்தினாலே, ஒவ்வொரு இருடி பத்தினிக்கும் ஒவ்வொரு புத்திரராக நாற்பத்தெண்ணாயிரம் குழந்தைகள் உதித்து இறைவன் கட்டளைப்படி எல்லோரும் தவசிகளாயினர்,

முனிவர்கள் இதனை அறிந்தார்கள். இவர்கள் பிரபஞ்சம் அநாதி, நித்யம் என்றும், ஆன்மாக்கட்கு வேறாகக் கர்த்தா ஒருவருமில்லை என்றும், சிவன் முதலாயினோரெல்லாரும் அநித்தியரென்னும் கொள்கையை யுடையவர்கள். இதை ஒழிக்கத்தான் எம்பிரான் இக்கோலம் பூண்டது. பரமசிவனைத் தங்கள் தபோபலத்தால் எதிர்த்துப் பார்த்தார்கள்; சபித்துப் பார்த்தார்கள்; ஒன்றும் பயனில்லை. கடைசியாக ஒரு அபிசார யாகம்செய்து ஸ்வாமியை அழிக்க ஏற்பாடு செய்தார்கள். அதனின்று புலி, மான், மழு, அக்கினி, பாம்பு, பூதங்கள் முதலியவைகளைச் சிருஷ்டித்துச் சிவபெருமானைக் கொல்ல ஏவினார்கள். அவை பரமசிவனை யணுக, இறைவன் அவைகளை வதைத்தும், துன்புறுத்தியும், ஆடையாகவும், ஆபரணமாகவும், ஆயுதமாகவும் தரித்துக்கொண்டார். முனிவர்கள் கோபம் பின்னும் அதிகமாக மூண்டது. உடனே அவர்கள் ஒரு முயலகனைச் சிருஷ்டித் தனுப்ப, ஆண்டவன் அவனெதிரே பாய்ந்து முதுகு நெறியும்படி அவன் மேலே தமது வலக்காலை வைத்து மிதித்துக்கொண்டார்.

பிறகு அவர்களை அனுக்கிரகிக்கத் திருவுள்ளம் கொண்டவராய், அச்சமயம் ஆகாய மார்க்கமாக இடப

வாகனத்தோடு வந்த உமாதேவியார் தமது இடது பக்கத்திலே வீற்றிருக்க, நான், மோகினி வடிவம் நீங்கி முன்போல் இந்த உருவத்துடன் வணங்கி நிற்க பிரமேந்திராதி தேவர்கள் சூழ்ந்து சேவிக்க, எம் பெருமான் திருநடனம் செய்தருளினுர். ரிஷிகள் ஆனந்த பரவசமாய்த் தொழுதார்கள். பரமசிவன் அவர்களைப் பார்த்து 'நீங்கள் நமது நிருத்யத்தை சிவலிங்கத்திலே தியானித்து வழிபட்டு வாருங் கள்' என்று கூறி அந்தர்த்தானமாயினுர். அந்த நினைவு வரவே நித்திரையை நீத்து இங்கே வந்து அமர்ந்தேன்'' என்ருர்.

இதைக்கேட்டதும் ஆதிசேடன் ஆனந்தக் கண் ணீர் சொரிந்து அந்த திவ்ய திருநடன தரிசனத்தைத் தானும் கண்டு இன்புற அவா மேற்கொண்டனன். உடனே திருமால் ''நீசிவபிரானைக் குறித்துத் தவம் செய்க. நினைத்தது கைகூடும்'' என்ருர்.

உடனே ஆதிசேடன் உத்தர கைலையங்கிரியை யடைந்து அனேக காலம் அகோர தவம் புரிந்தான். இவன் பக்திக்கிரங்கிய ஈஸ்வரன், பிரமனைப்போல இவன்முன் தோன்றி ''ஆதிசேடா! நின் அருந்தவத் திற்கு மெச்சினேம்; வேண்டிய வரம் யாது? கேட்டு விரைவில் பெற்று அகமகிழ்வாய்'' என்ருர். அதற்கு அவன் 'சர்வேஸ்வரனை சந்திரசேகரப் பெருமானை யன்றி வேறெவரையும் நான் இச்சமயம் வேண்டி லேன். தாங்கள் என்பொருட்டு வீண்சிரமம் அடைய வேண்டாம். எனக்குப் பதவிமோகம் இல்லை; வித்தை முதலிய சித்திகளிலும் விருப்பம் இல்லை; இன்னும்

மற்ற சுகபோக பாக்கியாதிகளிலும் இச்சை இல்லை. பரமேஸ்வரரின் திருநடனத்தைப் பார்க்கவேண்டும் என்கிற ஒரே எண்ணம்தான் இத்தவத்தைச் செய்ய என்னைத் தூண்டியிருக்கிறது'' என்று ஆனந்தபாஷ்பத்துடன் நாக்குழற மெய்சிலிர்க்கக் கூறினன். பிரமனுக வந்த சிவ்பெருமான் பெரிதும் மகிழ்ந்து ''அன்பனே! அரி அயனும் காணுதற் கரியவனை நீ காண்பதே அரிது; காணினும் அவர் நிருத்தம் புரிவதைக் காண்பது அரிதினும் அரிது'' என்றார். ஆதிசேடன் மனம் நொந்து ''அன்னவாகனரூட பிரமதேவரே! சிவபெருமானின் ஆனந்தத் தாண்டவ தரிசனத்தைப் பாராமல் என் ஜீவனை வைத்திருக்கமாட்டேன். இப்பிறவியில் அப்பாக்கியம் பெருவிடினும் அடுத்த பிறவியில் எப்படியும் பெறுவேன். இது சத்தியம்'' என்ருன். அவன் உறுதியைக் கண்டு மகிழ்ந்த பரமசிவன் தமது உண்மைத் திருக்கோலத்தைக்காட்ட, ஆதிசேடன் மெய்ம்மறந்து ஆடிப்பாடித் துதித்துப் பரவசமாய் நின்ருன். அப்போது சிவபெருமான் அவனைப் பார்த்து'நீ நமது நிருத்தத்தைத் தில்லைவனத்தில் கண்டு களிக்கலாம் அதற்கு இந்த ஆயிரம் முடிகளோடு கூடிய பயங்கரமான சர்ப்ப ரூபம் பொருந்தாது. ஆதலால்நான்சொல்லுவதைப் போல் கேட்டுநட. முன்னொருகால். அத்திரிமகாமுனிவரும் அவர்பத்தினி அனுசூயாதேவியாரும், புத்திரனில்லாமல் உன்னைப் புத்திரனுகப் பெற திருமாலை நோக்கி அருந்தவம் புரிய நீ அவள் கையிலே ஐந்து தலைநாகமாக அவதரித்தனை;பார்த்து அவள்பயப்பட நீ உடனே அவள் பாதத்தில் வீழ்ந்தனை, அதனல் உனக்குப் பதஞ்சலி எனப்பேராயிற்று. அதுபோல்

முன்னைய உணர்வு மாருது, அதே பதஞ்சலிஎன நாமத்தைத் தரித்து நாகலோக வழியே செல்லுக; அங்கே நடுவில் ஒரு மலை யுண்டு; அதன் தென்புறத்தில் ஒரு பிலத்துவார மிருக்கிறது. அதன் முடிவில்தான் நாம் முன்னே கூறிய தில்லைவனம் உளது, அதனுள் வடபாகத்தில் ஆலவிருட்ச நிழலில் மூலத்தான மூர்த்தி ஒன்று பொலிவுபெற்றிருக்கின்றது. அங்கு நமது ஆனந்தத் தாண்டவத்தைக் கண்டுகளிக்க வியாக்கிரபாதர் என்கிற ஒரு முனிசிரேஷ்டர் அரிய தவநெறியுடன் நம்மை நாடோறும் பூசித்துவருகிருர். அவரிடம் நீ சென்றிருப் பாய். நாம் அடுத்து வரும் தைப்பூசத்தில் வியாழக்கிழமையுடன் கூடிய சித்தியோக விசேஷ தினத்தில், மத்தியான வேளையிலே நமது ஆனந்தத் தாண்டவத்தை அங்கே நடாத்துவோம். தரி சிக்கலாம்'' என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினுர்.

பிறகு ஆதிசேடன் பேரானந்தத்தோடு புறப்பட்டு பதஞ்சலி ரூபத்துடனே தில்லை வனத்தையடைந்து வியாக்கிரபாதரைக் கண்டு வணங்கி நிகழ்ந்ததை யெல்லாம் விபரமாய்ச் சொல்ல அவர் ஆனந்தக்கடலிலே மூழ்கி விளையாடிப் பரமசிவனை நாவா ரத்துதித்துப்பாடி மகிழ்ந்தனர். பிறகு பதஞ்சலியை அழைத்துக் கொண்டு புண்டரீக புண்ணிய தீர்த்தத்திலே மூழ்குவித்து, ஸ்ரீ திருமூலத்தானரை வணங்கச் செய்து, அங்குள்ள தேவரகசியங் களை எல்லாம் காட்டி கந்தமூல பலாதிகளால் உபசரித்து, திருப் புலீச்சுரத்தருகாமையுள்ள குளத்தின் பக்கத்தில் ஒரு பர்ண சாலை கட்டுவித்து அதிலே அவரை இருக்கும்படி

செய்தார், இருவரும் இறைவனை விதிப்படி ஏற்றிப் போற்றிப் பணிந்து வந்தனர்.

நாட்கள் பலவாயின. புதுமை புதுமையாக அனேக முனிவர்கள் அங்கே வந்து தங்கினர். நடன தரிசனத்திற்காக முன்னே வந்திருந்த அந்தணர் மூவாயிரவரும் இவர்களோடு வந்து சேர்ந்தார்கள். இறைவழிபாடு எல்லோராலும் இனிது நடைபெற்றது. எதிர்பார்த்த நாளும் வந்து சேர்ந்தது. ஆம் வியாழக்கிழமையும்-சித்தயோகமும்-தைப் பூசமும் கூடிய விசேஷ தினம். உச்சிவேளை; அனைவரும் அரகரவென்றிசைத்துப் புளகாங்கிதராய் நின்றனர். அச்சமயம் தேவதேவர் வருகின்றார்; சிவபெருமான் வருகின்றார்; உமாபதி வருகின்றார் என்று பானுகம்பர், பேரிகை முழக்கத்திடையே தமது ஆயிரம் வாய்களிலும் ஆயிரம் சங்குகளை வைத்துக் கோஷித்தார். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். பலவித வாத்ய ஒலிகள் எங்கும் இன்னிசையைப் பரப்பின. எம்பெருமான் பதஞ்சலி வியாக்கிரபாதர்களுக்கு ஞானதிருஷ்டியை அனுக்கிரகிக்க இருவரும் ஞானப்ரகாசமான மன்றில் ஞானசக்தியை அதிட்டித்துத் தம்பிரானார் நிருத்தம் செய்யக்கண்டு ஆனந்தித்தார்கள்.

"நின்றருளிய ஸ்ரீபாதமும், தூக்கியருளிய சிவந்தபாதமும் திருவடிகளிலே தரித்தருளிய திருச்சிலம்பும், திருமேனியின், திவ்யப் பிரகாசமும் அழகிய திருத்தொண்டையும், சாத்தியருளிய புலித்தோல் ஆடையும் அது தரிக்கப்பட்ட இடையும், அதில் சாத்தப்பட்ட கச்சின் அழகும், அழகு நிறைந்த திருவுந்தியிலே பொருந்திய உதரபந்தனச் சேவையும், திருயஞ்ஞோப

வீதத்தோடு கூடிய திரு மார்பும், வீசியருளிய சிவந்த கரமும், புயங்கம் பொருந்தின ஸ்ரீயத்தத்தை கவித்தருளிய பிரகாசமும் பரநாதம் பொருந்தின வளவிய தமருகமும், தீயகலும் முன்னே திரண்ட தோளும், நீள ஒளி பொருந்தின திருமிடறும், திருத்தோடும், வெள்ளிய சங்கக்குழையும் பொருந்தின திருச்செவியும், வெளிப்படக் குற்றமற்ற திருவாய்ப் பவளமும், நீக்கமறச் சிரித்தருளிய மோகன வடிவமும் மேலான தாமரை மலரின் அழகுபோன்ற திருமுகப் பிரசன்னமும், மலர்க்குழலி உமாதேவியைப் பார்த்தருளுகிற திருநயனங்களின் கடாட்ச விளக்கமும், திருப்புருவத்தின் எழிலும், அழகிய திருநெற்றியும் பின்தாழ்ந்து விரிந்த கற்றைச் சடையும், சருப்பமும் நீங்காத கொன்றை மாலையும், கங்கையும், சந்திரனும், திருமேனியிற் பிரம உத்தூளனமும், இருண்ட மேகத்தையொத்த திருக்குழலிலே மணம் பொருந்திய மலர்கள் சேர்த்துச் செருகின திருமுடியும் நல்ல திருநெற்றியும் திலகமும் பொருந்தின இரண்டு வில்லையொத்த திருப்புருவமும், வடித்த வேல்போல் விழியும், திருச்செவியும், விளங்கும் குமிழமலர்போன்ற திருமூக்கும், ஆதொண்டைக் கனிபோலுந் திருவாயிதழும், முத்துபோலும் நகையும், பச்சென்ற திருமேனியழகும், கள்ளிக்கமுகு போன்ற திருக்கழுத்தில் நித்தியமான பொலிவினையுடைய திருமங்கல நாணின் அழகும், பக்கம் பொருந்தின மூங்கிலைப் பார்க்கிலும் அழகிய தோளும், கைத்தாமரையிலே ஏந்தும், மேலான அழகு விளங்கின செங்கழுநீர்ப் பூவும், செங்கழுநீர்த் திருமாலையும், கோங்கின் அரும்புகளை நிந்தித்த திருத்தனங்களையும், திருவாபர

ணமும், துடியொத்த மருங்கும், பெரும்பாம்புகளின் விரிந்த படங்கூடியதை ஒத்தநிதம்ப தலத்திற் சாத்தியருளிய பரிவட்டமும், மிகவும் அசைந்த நிலையும் சிவந்த ஸ்ரீ பாதத்திற் சாத்தின பொற்பாடகத்தின் மேழே ஒளிவிளங்கும் திருச்சிலம்பும் பொருந்தின பரமேஸ்வரியார் அதிசயித்துக் கண்டருள,

சத்தியமே திருமேனியாகக்கொண்டு சக்தி காண ஆடிய தம்பிரானுர் ஆயிரம் ஆதித்தப் பிரகாசம் ஒன்ருகக் கூடின மண்டலம்போல குறைவற நிறைந்து நாடுதற்கரிய ஞானசபையில் நம்போல்வாரை இரட்சிக்கவேண்டி முன்பு பிரம விஷ்ணுக்கள் தேடிக்காணுத சோதி சொரூபத்தை யனுட்டித்து நிருத்தம் செய்தருளக் கண்டார்கள். அச்சமயம் பதஞ்சலி முனிவர் பரமசிவத்தைப் பணிந்து "ஸ்வாமி! இன்றுமுதல் இதைப்போலவே இங்கு தேவரீரே எல்லோருக்கும் ஆனந்த நிருத்தத்தைப் புலப்படுத்தவேண்டும்" என பிரார்த்திக்கப் பரமனும் "அவ்வாறே ஆகுக" என்றருளினுர்.

இந்தத் தரிசனம்தான் விசேஷமாய் ஆனி மாதத்திலும், மார்கழி மாதத்திலும் நாம் கண்டு இன்புறுவது. இதற்கு எண்ணிறந்த மக்கள் எல்லா இடங்களிலிருந்தும் வருவர்.

இந்த ஆனந்தத் தாண்டவம் ஒன்ருலேயே நடராஜர் ஐந்தொழிலையும்நடத்துகிருர். தனதுவலக்கரத்திலுள்ள உடுக்கையிலிருந்து சிருஷ்டியும், அபயகரத்திலிருந்து திதியும் அக்கினிகரத்திலிருந்து சங்காரமும், முயலகன்மேலூன்றிய திருவடியிலிருந்து திரோதமும், குஞ்சிதபாதத்திலிருந்து முத்தியுமாக பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவம் நடைபெறுகின்றது.

இதைத்தான் உண்மை விளக்கம் 36-வது பாட்டில்

தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே யுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

என்று கூறப்பட்டுள்ளது.

## வாதவூரடிகள் புராணம்.

அந்தநன் னடமேதென்னி லைந்தொழி னடத்தலாகும்
பந்தம தகற்றுமிந்தப் படிவமு மதுவேயாகும்
வந்துல கத்தில் யாரும் காண்பரேல் வழுவாமுத்தி
தந்தரு ளளிக்கும்தெய்வத் தலமுமத் தலமேயாகும்.

## சிவஞான சித்தியார்.

"ஐந்து நலமிகு தொழில்களோடு நாடகம் நடிப்பன் நாதன்"

இந்த திவ்விய நடனத்தை திருமூலநாதர் ஞான ஆனந்தக் கூத்து என்கிறார்.

வேதங்க ளாட மிகுஆ கமமாடக்
கீதங்க ளாடக் கிளர்அண்டம் ஏழாடப்
பூதங்க ளாடப் புவனம் முழுதாட
நாதங்கொண் டாடினன் ஞானனந்தக் கூத்தே.

**அபிஷேகம்:** வருடத்தில் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு ஆறுமுறை அபிஷேகம் நடைபெறும். (1) சித்திரைத் திருவோணம், (2) ஆனித் திருவுத்திரம், (3) மார்கழித் திருவாதிரை, (4) ஆவணிச் சுக்கிலபக்ஷ சதுர்த்தசி, (5) புரட்டாசி சுக்கிலபக்ஷ சதுர்த்தசி, (6) மாசி சுக்கில பக்ஷ சதுர்த்தசி.

### வெண்பா.

சித்திரையில் ஓணமுதல் சீரானி உத்திரமாம்
சத்ததனு ஆதிரையுஞ் சார்வாகும்—பத்திவளர்
மாசிஅரி கன்னி மருவு சதுர்த்தசிமன்
றீசரபி டேகதின மாம்.

# தில்லைக் காளியும், திருநடனமும்.

## தில்லையம்மன் கோயில்.

ஒரு சமயம் காளியின் தீச்செயல்களைக் கார்க்கோடக முனிவர் நாரதரிடம் எடுத்துக்கூற, அவர் காதாரக்கேட்டு இதற்கோர் வழிசெய்யவேண்டும் என்று எண்ணினார்; அவ்வளவிலே காளி அவர்முன் தோன்றி அவரை விழுங்க ஓரே பாய்ச்சலாகப் பாய்ந்தாள். ஆனால் நாரதர் தமது தபோபலத்தால் தப்பித்து மகா விஷ்ணுவிடம் விரைந்தோடி விஷயத்தை அறிவிக்க, அவர் பரமசிவனிடம் விண்ணப்பம் செய்தார். உடனே யுத்த சன்னத்தராய் தில்லையிலே காளியை எதிர்க்க உமைபங்கன் புறப்பட்டார். காளியின் சேனை ஒரு நொடியில் சின்னபின்னப் படுத்தப்பட்டது. காளியும் பரமனைக்கண்டு பயந்து "நிருத்த யுத்தம் புரிவோம்" என்றனள்.

பலவித வாத்தியங்களுக்கிடையே இருவருக்கும் நிருத்த யுத்தம் தோற்பு கெலிப்பு இல்லாமல் நெடுநேரம் வரை நடந்தது. அச்சமயம் பரமசிவனின் திருச் செவியிலிருந்த குண்டலமானது நிருத்த வேகத்தால் நிலத்தில் நழுவ, அதை அவர் திருவடி ஒன்றினா லெடுத்து தரித்துத் திருத் தாண்டவஞ் செய்து

காளியைத் தோல்வியடையச் செய்தார். அவள் இதற்கு எதிராக என்ன செய்யமுடியும். வெட்கத்துடன் செயலற்று நின்ருள். பரமனைப் பணிந்து பாதாரவிந்தத்தில் விழுந்தாள்.

இவ்விதம் தோல்வியடைந்த காளியைப் பரமசிவன், வடக்கெல்லை காக்குந்தெய்வமாக ஏற்படுத்தி கிழக்கு முகமாய் திருக்கோயில் கொண்டெழுந்தருளும்படி கட்டளையிட்டார்.

பின்னர் அவள் தான் இழைத்த பெருந்தவறையும் அபசாரத்தையும் பொறுத்து மன்னித்தருளுமாறு பிரார்த்திக்கச் சிவபெருமானும் மனமிரங்கித் தமது சூலத்தை புவியில் நாட்டி ஒருதீர்த்தம் உண்டாக்கி அவளைப்பார்த்து 'நீ இதில்மூழ்கினல் உனது தோஷம் நீங்கிக் கோர ரூபமும் நீங்கி நான்கு முகங்களோடு கூடிய சாந்த ரூபமும் பெறுவாய்' என்று கூறிமறைந்தார். இத்தீர்த்தத்திற்கு பிரமசாமுண்டி தீர்த்தம என்று பெயர். தேவி தில்லையம்மன் என்றும் பிரமசாமுண்டீஸ்வரி என்றும் இரு பெயர்களோடு சாந்த ஸ்வரூபியாய் மேற்கு நோக்கி வீற்றிருக்கிருள். காளிமூர்த்தம் கிழக்குநோக்கியுள்ளது.

தில்லைவாசிகள் பலரும் யாத்ரீகர்களும் இந்தத் தேவியைத் தரிசித்து எண்ணிறந்த நன்மைகளையும் பலன்களையும் அடைந்துள்ளார்களென்பது அனைவருமறிந்த விஷயம். ஏவல், பில்லி, சூன்யம், பேய் பிசாசு முதலிய சங்காதோஷங்கள் எல்லாம் இந்த அம்பாள் சன்னிதானத்தில் வெகு எளிதில் நீங்குகின்றன. அநேகர்தேவியை ஆசாரத்துடன் வணங்கி

DONATED BY
Thiru. A. THANGAVELU, AMIE.,
RETD. TELEGRAPH MASTER

பூசித்து புத்திரசந்தானம் அடைந்திருக்கின்றனர். சந்தான பாக்கியம் இல்லாத சதிபதிகள் தேவியை வணங்கித்தியானித்து ஆச்சார காணிக்கை செலுத்தித்தொட்டிலே ஆட்டினுல் சந்ததி உண்டாவது சகஜமாயிருக்கிறது. கருதரித்தபெண்கள் தீர்த்தத்தில் மூழ்கித் தேவியை வழிபட திடதேகமும் சுகப் பிரசவமும் அடைவர் என்பது திண்ணம்.

பிரமசாமுண்டி தீர்த்தத்தின் பெருமையும் மிகப் பிரசித்தமானது. தில்லைவாசிகளில் பெரும்பாலோர் ஆண்களும், பெண்களும் இத்தீர்த்தத்தில் மூழ்கிப் பலவித நோய்களும், பேய் பிசாசு முதலிய சங்கா தோஷங்களும் நீங்கப்பெற்று சுகமாய் வாழ்கின்றனர். அம்பிகையின் தோஷத்தைப் போக்கியதால் இதற்கு 'சிவப்பிரியை' என்றும், சிவபெருமானுல் ஏற்படுத்தப்பட்டதால் 'பிரம சாமுண்டிகா தீர்த்தம்' என்றும் பெயர் வழங்கி வருகிறது. தில்லையம்மன் கோயில் பிரமோற்சவம் வைகாசி மாதத்தில் நடைபெறும். தேவஸ்தானத்தின் வருமானம் மிகக்குறைவாயிருப்பதாலும் தினசரி கட்டளை உற்சவாதிகள் சிறப்பாக நடைபெறவேண்டியிருப்பதாலும் பொது மக்களும், யாத்ரீகர்களும் தம்மாலியன்ற பொருளுதவி செய்து அம்பிகையின் பூரண அருளுக்குப் பாத்திரமாவார்களாக!.

## அரசன் இரணியவர்மனும், சிதம்பர க்ஷேத்திர ஆலயமும்.

சூரியபகவானுக்கு மனு, இயமன்என இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். அவர்களில் பூமியிலே வெளிப்படப் பாவம் செய்தவரை இம்மையிலேயே

தண்டிக்க மனுவுக்கும், வெளிப்படாமல் பாவஞ் செய்தவர்களை தண்டிக்க இயமனுக்கும் பரமசிவன் அதிகாரம் கொடுத்திருந்தார். இமயமலைக்குத் தெற்கேயுள்ள கௌடதேசத்துக்கு அரசனாக மனு உலகத்தை ஆண்டுவந்தார். இப்படி ஒருவர்பின் ஒருவராய் மரிக்க, ஐந்தாவது மனு இருபெண்களை விவாகம் செய்து கொண்டு இராஜ்யபரிபாலனம் செய்து வந்தார். மூத்தாளிடத்தில் சிங்கம்போல் வெண்ணிறமுடைய சிங்கவர்மன் என்னும் ஒரு புத்திரனும், இளையாளிடத்தில் வேதவன்மன், சுமதிவன்மன்என்னும் இரு குமாரர்களும் தோன்றினர்.

உடலுக்குற்ற குற்றத்தினால் பட்டத்திற்கு யோக்கியதை இல்லாத சிங்கவன்மன், தந்தையனுமதியுடன் ஊரூராய்த் திரிந்து காசி க்ஷேத்திரத்தை அடைந்து விசுவநாதரை வணங்கி, பிறகு ஸ்ரீசைலம் திருக்காளத்தி முதலிய திவ்ய க்ஷேத்திர யாத்திரை செய்யலானார் ஒரு சமயம் கானக மார்க்கமாகப் போகும்போது ஒரு வேடனைச் சந்தித்து, "இந்தக் காட்டிலே ஏதாவது விசேஷமுண்டா?" என. அவன் 'இங்கே ஆற்றங்கரை யோரத்திலுள்ள மாமரத்தடியிலே ஒருதேவர்இருக்கிறார்; அவர் பக்கத்திலே யாரோ ஒரு பச்சைநிறப்பெண் ஒருசுரங்கவழியாக வந்து காலை மாலை இருவேளையும் அவர்மேல் புஷ்பங்களைச்சொரிந்து பூசிக்கின்றாள்" என்றான். உடனே அவனோடு அந்த இடத்தை அடைந்து தானும் அந்ததேவரை வழிபட்டுவந்தார் பிறகுமேற்கொண்டு யாத்திரைசெய்ய மனம் நாட, உடனிருந்த வேடனை "வழிபார்த்துவா"என்று அனுப்பினார். அவன் சிறிது

தூரம்சென்று உடனேதிரும்பி 'அதோ அந்த தில்லை வனத்திலே பொற்றாமரைக் குள ஓரத்திலே ஒரு புலியன் உறங்கிக்கொண்டிருக்கிறான்' என்று அறிவித்தான். இதைக்கேட்டதும் ஆச்சரியமடைந்து அவனை வழிகாட்டுமாறு தெரிவித்து அவன்பின்னே சென்று தில்லைவனத்தைச் சார்ந்து சிவகங்கைக் கரையிலே நிஷ்டையிலிருந்த வியாக்கிரபாதர் முன் வணங்கி நின்றார். சிறிதுநேரம் கழித்து கண்விழித்த முனிவர் ஞானதிருஷ்டியால் சகலமும் உணர்ந்து "சிங்கவன்மா! உன்வரலாறுஎன்ன"வென்றுகேட்க அவன் உள்ளதைக்கூறி "ஸ்வாமி, இப்படியேஎன் வாழ்நாளைத் தவவழியிலே கழிக்க நினைக்கின்றேன். தேவரீர் அருள்புரியவேண்டும்" என்றான் அதற்கு அவர் "உன்பிதா மிகவும் வயோதிக நிலையை அடைந்துவிட்டார். இராஜ்ய பாரத்தை இனி நீதான் ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்றார். அவன் முனிவரைப் பணிந்து "ஸ்வாமி, இவ்வடிவம் அரசாள்வதற்கு ஏற்றதன்று, தம்பியர் இருக்கின்றனர். அடியேன் தவத்தொழிலுக்கே இனி உரியவன் என்றான்." முனிவர் சிறிதுநேரம் யோசித்து இவன் நல்லுருவம் பெறுவானாயின், அரச கோலத்தை யடைவான்; 'இச்சிதம்பர ஆலயத்திருப்பணிக்கும் ஆளாவான்' இறைவன் திருவுள்ளம் எவ்வாறோ என்று மனதில் நினைத்துக்கொண்டே அவனை அங்கேயேயிருக்குமாறு கூறி, பதஞ்சலியிடம் சென்று விஷயத்தைக் கலந்து இருவருமாகக் கனகசபையில் புகுந்து, நிருத்தகாலத்தில் எம்பெருமானை வணங்கி 'பரமேஸ்வரா! கௌடதேச ராஜகுமாரன் அதோ

நிற்கிறுன்: அவன் உடற்குற்றத்தை நீக்கி: திரு நடனத்தைக் காட்டிஆட்கொண்டருளவேணும்'' எனப்பிரார்த்திக்க, ஆனந்த நடராஜப் பெருமானும் அகமகிழ்ந்து நீங்கள் அவனை சிவகெங்கையிலே ஸ்நானம்செய்வித்து இங்கே அழைத்து வாருங்கள் என்ருர் சிங்கவர்மன் திருக்குளத்திலே மூழ்கி எழுந்த அந்த க்ஷணமே முன் வடிவம் நீங்கிப் பொன்னுருவம்பெற்று எழுந்து அதனுலே இரண்யவன்மன் என்னும் பெயரையும் பெற்ருன்.

பிறகு வியாக்கிரபாதர் அவனுக்குப் பஞ்சாக்ஷர உபதேசம் செய்து சபைக்கு அழைத்துச் செல்ல எம் பெருமான் திருநடன கோலத்தைக் காண்பிக்க, அவனும்தரிசித்து மெய்சிலிர்க்க நெஞ்சம் நெக்குருக கண்களிலே ஆனந்த பாஷ்பம் சொரிய நின்ருன் பரமசிவன் மகிழ்ந்து "இரண்யவர்மனே! நீ நமக்கும் வியாக்கிரபாதருக்கும், பதஞ்சலிக்கும், மூவாயிரம் முனிவருக்கும் இனி தொண்டுபுரிவாயாக!'' என்று கட்டளையிட்டு மறைந்தார், அதுமுதல் வியாக்கிர பாதருடனே தவ நெறியிலிருந்து வந்தான்.

சிலகாலம் கழித்து கௌடதேசாதிபதியாகிய மனு,வசிஷ்டரிடம் தமது இராஜியத்தைமூத்தகுமாரன் ஆளும்படிச் செய்யவேண்டுமென பிராத்தித்துக் கொண்டு சுவர்க்கத்தை யடைந்தார். இளைய குமாரர் களைக்கொண்டு கிரியைகளை முடித்துவிட்டு வசிட்டர், வியாக்கிரபாதரை அடைந்துவிஷயத்தைதெரிவித்தார் அவர் உடனே இரண்யவர்மனின் அபிப்பிராயத்தைக்கேட்க, அவர் ஸ்வாமி 'ஸ்ரீ மங்

DONATED BY
THANGAVELU. AMIE.

நடராஜமூர்த்திக்கும் தேவரீருக்கும் செய்யும் வழி பாட்டையன்றி வேறொன்றையும் யான் விரும்பேன்'' என்றான், அதற்கு வியாக்கிரபாதர் ''அப்படியானல் நீ வசிஷ்டருடன் சென்று இராச கிரீடத்தையும், இரத்தினம், பொன் முதலிய திரவிய வகைகளையும், ரக கஜ துரக பதாதிகளையும், அசைச்சர்களையும் கொண்டுவா வரும்போது அந்தர்வேதியிலிருக்கும் நம்முடன்நிருத்த தரிசனம் செய்துகொண்டிருந்த திருவுடை யந்தணர் மூவாயிரவரையும் அழைத்து வருக!'' என்றார்.

எல்லோரிடமும் விடைபெற்றுச்சென்ற இரண்ய வன்மன் கௌடதேசம் சென்று அங்கே சிலநாள் தங்கிப் பின்னர் சகல விருதுகளுடன்; திருவுடையந்தணர்களையும் தேர்மீது அழைத்துக்கொண்டு சிதம்பரம் அடைந்தனன். அந்தணர்கள் வியாக்கிரபாதர் முன்னிலையில் வந்து தங்களை எண்ணிப்பார்க்கையில் ஒருவர்குறைய இரண்யவன்மன் திகைக்கப்பரமசிவன் அசரீரியாய் ''இவ்வந்தணர்கள் நமக்கு நிகராவர்; நாம் அவர்களுக்கு நிகராவோம். நாம் இவர்களில் ஒருவர்'' என்றருளிச்செய்தார் இதைக்கேட்டதும் எல்லோரும் அஞ்சி நடுங்கிப் பணிந்தனர் இரண்யவன்மன் கனக சபைக்குக் கிழக்குத் திசையிலே கொற்றவன்குடி என ஒரு நகரத்தை நிர்மாணித்துக்கொண்டு அங்கே தங்கியிருந்தான்.

வியாக்ரபாதர் வாக்கின்படி இரண்யவன்மன்இப் பூமியை ஆண்டு வரவும் தம்பிமார்கள் கௌட தேசத்தை ஆளவும் ஏற்பாடாயிற்று அப்படியே இரண்யவன்மனுக்கு முனிவர் விவாகம்செய்வித்து

முடிசூட்டி புலிக்கொடி கொடுத்து சோழராஜாவாகச் செய்தார்சிதம்பரத்திருப்பணியை, முனிவர் கட்டளைப் படி இரண்யவன்மன் மேற்கொண்டு ஸ்ரீமந் நடராஜ மூர்த்திக்குத் திருவம்பலமும், திருமூலட்டானேஸ் வரருக்குத் திருக்கோயிலும்மற்றும்மதில்கள், கோபுரங் கள், தில்லை வாழந்தணர்கள் குடியிருக்கத் திரு மாளிகைகளும் கட்டுவித்தார். பூசை, திருவிழாமுதலிய வைபவங்களுக்கும், ஏற்பாடுசெய்தார்.

## நித்திய பூசை

தினந்தோறும் காலை 6-மணிக்குப் பள்ளியறை பால் நைவேத்தியம் நடைபெறும் பின்னர் 8-30-க்கு முதற்காலமும்10-30-க்கு 2-ம் காலமும், பகல்12-க்கு உச்சிகாலமும், மாலை 6-மணிக்கு சாயரக்ஷையும் இரவு 8-க்கு 2-ம் காலமும் 10-மணிக்கு அர்த்த ஜாமமும் ஆக 6-கால பூசை நடக்கும்

## உற்சவம்.

ஒவ்வொரு வருடமும் ஆனி மாதத்திலும் மார்கழி மாதத்திலும் பத்துநாள் உற்சவமும் மிகவும் விமரிசை யாய்நிகழும் முதல்நாள் "கொடியேறும்" உற்சவமும் செய்யும் பாக்கியம் அத்தில்லைவாழ்செங்குந்தர்களுக்கு முன்னைய புண்ணிய வசத்தினுலே கிடைத்திருக்கிறது இரண்டாம்நாள் வெள்ளி சந்திர வாகனக்காக்ஷி மூன் ரும் நாள் தங்கசூரிய வாகனக்காக்ஷி 4-ம்நாள் வெள்ளி பூதவாகனக் காக்ஷி 5-ம் நாள் வெள்ளிரிஷபவாகனத் திலும் 6-ம் நாள் வெள்ளியானை வாகனத்திலும்,

ஏழாம் நாள் தங்க கைலாசவாகனத்திலும், எட்டாம்நாள் தங்கரதத்தில் பிக்ஷாடன கோலத்துடனும் ஸ்வாமி எழுந்தருளுவார். ஒன்பதாம் நாள் காலை அற்புதத் தேர்திருவிழா நடைபெறும், அன்றுமாலை நடராஜப் பெருமானும் சிவகாமசுந்தரியும் தேரினின்றும் இறங்கிவாண வேடிக்கைகளுடனும் வாத்தியகோஷத்துடனும் ஆயிரக்கால் மண்டபம் செல்வது ஒவ்வொருவரும் காணத்தகுந்த ஒப்பற்ற காட்சியாகும்; மறுநாள் அந்த இராஜ சபையிலே மஹா விசேஷ தினமாகிய தரிசனத்தன்று (ஆனி உத்திரத்தன்றும் மார்கழித் திருவாதிரையன்றும்) காலையில் மஹாபிஷேகமும் திருவாபரண அலங்காரங்களும், மகா பூசையும் நடைபெறும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் அப்போது ஆனந்த நடராஜரைத் தரிசிப்பர் பிறகு திருநடன கோலத்துடன் புறப்பட்டு நடனப்பந்தலில் வந்து இலட்சக்கணக்காய் நிற்கும் ஆன்மாக்களுக்கு தனது ஆனந்தத்தாண்டவ சேவையைச் சாதித்துத் தமது பொற்சபா மணிமண்டபம் சேர்வர் இக்காட்சி பூர்வஜென்ம புண்ணிய மிருந்தாலன்றிஎவருக்கும் லபிக்காது பிறவி யெடுத்ததன் பெரிய பயனை அன்றே வெகு எளிதில் இந் நடராஜப்பெருமானைத் தரிசிப்பதால் அடையலாம் 11-ம் நாள் விடையாற்று விழா இரவு 10-மணிக்கு மேல் புஷ்ப விமானக்காக்ஷி வீதி உலாவுடன் ஒவ்வொரு உற்சவமும் முடிவுறும்,

ஐப்பசியில் சிவகாமியம்மைக்கும் பங்குனியில் பாண்டியநாயக சுப்ரமணியசுவாமிக்கும் திருவிழா.

தீக்ஷிதர்கள் :— ஸ்ரீமந் நடராஜப் பெருமானுக்குப் பூஜை செய்யும் அந்தண சிகாமணிகள் என இவர்களை எல்லோரும் கூறுவர். ஆதியில் தில்லை மூவாயிரவராக இருந்தார்கள். இவர்களைக் குறித்துத் திருநாவுக்கரசர்

"திருவுடை யந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்,"

என்றும்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது திருத்தொண்டத் தொகையில்

"தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்"

என்றும்,

திருஞானசம்பந்தர்

"கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலம்"

என்றும் சிறப்பித்துக் கூறியிருக்கின்றனர். இவர்கள் வைதிக நெறியிலே நிற்பவர், யாகாதி கிருத்தியங்களை விதிப்படி அனுஷ்டிப்பவர்; கொள்வது கொடுப்பது அவ்வகுப்பினருக்குள் தான். கொண்டையழகர் என ஒரு சிறப்புப் பெயரும் இவர்களுக்கு உண்டு.

## தீர்த்தம்

இத்திவ்ய க்ஷேத்திரத்திலே பத்து தீர்த்தங்கள் இருக்கின்றன. (1) சிவகங்கை, (2) குய்யதீர்த்தம், (3) புலிமடு, (4) வியாக்ரபாததீர்த்தம், (5) அனந்ததீர்த்தம், (6) நாகச்சேரி, (7) பிரம தீர்த்தம், (8) சிவப்பிரியை, (9) திருப்பாற்கடல், (10) பரமானந்தகூபம்.

இவைகளில் மிகவும் விசேஷமானது இரண்டு தீர்த்தங்களே. அவைகளாவன :

**சிவகங்கை :—** இது நடராஜப் பெருமான் ஆலயத்திலேயே இருக்கின்றது. இதில் ஸ்நானஞ் செய்வது பெரும் புண்ணியம். சிவபூசை, சிரார்த்தம் முதலிய கிரியைகளுக்குச் சிவகங்கா தீர்த்தமே சிறந்தது. இதில் முழுக தொழுநோய் முதலியன நீங்கும்.

சிங்க நிறம் பெற்ற சிங்கவர்மன் என்பான் வியாக்கிரபாதர் அனுக்கிரகத்தால், இச் சிவகங்கையிலே மூழ்கித் தங்கநிரம் பெற்று அதனுல் இரணிய வன்மன் என்னும் பெயர் பெற்ருன்.

இந்த சிவகங்கை சிவவடிவம் என்பர். இதில் மூழ்கினுர் ஞானம் பெற்று முத்தி எய்துவர், இதிலே மாசப்பிறப்பு அமாவாசை, பௌர்ணமி, திருவாதிரை, வருஷப்பிறப்பு, மாசி மகம், சிவராத்திரி; சூரிய கிரகணம் சந்திரகிரகணம் இந்த நாட்களில் ஸ்நானம்செய்வது மகா விசேஷம். ஸ்ரீ நடராஜப் பெருமான் நாம் எல்லோரும்உய்யும்வண்ணம்இத்தீர்த்தத்தைமுதன்முதலில் அத்தில்லையில் உண்டாக்கியிருக்கிருர். 6-வது நூற்ருண்டில் இரணிய வன்மன் இத்தடாகத்தை அபிவிருத்தி செய்தான். பின்னர் சோழராஜ்யத் தலைவனுன நரலோகவீரனுல் அழகிய விசாலமான படிகட்டுகள் ,சுற்றுமண்டபம் முதலியன அமைக்கப்பட்டது.

பரமானந்த கூபம் :— இது சிவ சத்தி வடிவம். மூலஸ்தான சமீபத்தில் இருக்கிறது. இதிலே சுக்கிரவாரம், நவமி, கிரகண காலம் இவைகளில் ஸ்நானம் செய்ய, வியாதிகள் நீங்கும் செல்வம் ஓங்கும்.

தை அமாவாசைதோறும் சிவபெருமான் மேற்கூறப்பட்ட பத்து தீர்த்தத்திலும் எழுந்தருளித் தீர்த்தம் கொடுத்து அருளுவார்; அதுகாலை எண்ணிறந்த பக்தகோடிகள் அந்தந்த தீர்த்தத்திலும் ஸ்நானம் செய்து பெரும் புண்ணியத்தை அடைவர்.

## சிதம்பர ரகசியம்

எம்பெருமானின் அருவத் திருமேனியே இரகசியம் என்பர். இந்த ஸ்தானம் ஸ்ரீ நடராஜமூர்த்தி எழுந்தருளியிருக்கின்ற இடத்திலே இருக்கின்றது. ஒரு தனிப் பிரதேசத்தில், மூர்த்திக்கு வலப்புறத்தில் சிறிது உயரத்தில் தங்கமய வில்வதளங்கள் தொங்கிய வண்ணமிருக்கின்றன இதுவே இரகசியம். ஞானிகளே இதன் உண்மை அறிவர். இதன் மகிமை செப்பத்தரமன்று. சிதம்பரச் சக்கரம் இருப்பதும் இங்கேதான். இதை ஒரு திறையால் மறைத்து வைத்திருப்பர். இதைத் தரிசித்தோர் இம்மை மறுமைப்பயனை எய்துவர். ஆறு காலங்களிலும் பூசை சமயத்தில் மும்மூன்று முறை பக்தர்களுக்கு இந்த இரகசிய தரிசனம் காண்பிக்கப்படும்.

இந்த இரகசியத்திற்குத் திரைச்சீலை ஒவ்வொரு வருடமும் புதிது புதிதாக சாற்றும் பாக்கியம் பலவருடங்களாக சென்னை

ஹிந்துமத பரிபாலன போர்டின் கமிஷனராயிருந்த செங்குந்த குலதிலகர் காலஞ்சென்ற பு. வே. நடராஜ முதலியார் அவர்கள் குமாரர் பு. வே. சுப்பிரமணிய முதலியாருக்கு ஏற்பட்டிருக்கிறது.

## சந்திரமௌலீஸ்வரர்

ஸ்ரீ நடராஜப்பெருமான் அருகில் தங்கப்பெட்டியில் இருக்கும் ஸ்படிக லிங்கத்திற்குத்தான் சந்திரமௌலீஸ்வரர் என்று பெயர் தினந்தோறும் நடக்கும் ஆறுகால பூசையிலும் இந்த லிங்கத்திற்குத்தான் அபிஷேகம் செய்யப்படுகிறது. அதனைக் கடவுளின் அருவுருவத் திருமேனி என்பர்.

## இரத்தினசபாபதி

தினமும் பகலில் நடக்கும் 2 ம்கால பூசையில் மாத்திரம் தான் இம்மூர்த்திக்கு அபிஷேகாதிகள் செய்யப்படுகின்றன. இது மணிமயமாதலால் கற்பூர தீபாராதனை சமயம் ஒளிமயமாய் விளங்கும்.

## சுவர்ணகால பைரவர்

இவர் நடராஜர் சிவகாமியம்மன் பக்கத்தில் விக்ரஹ ரூபமாக இருக்கிருர். வீசேஷ நாட்களில் இவரை வெளியே எடுத்து வந்து விசேஷமாய்ப் பூசிப்பது வழக்கம். சிதம்பரத்திலே வாசம் செய்து ஈசனை தரிசிப்பவர்களுக்கு எமதண்டனை இல்லை. இப் பைரவர் தமது சூலத்தால் அவர்களைத் தண்டித்து இறுதியில் முக்தி யுலகத்தில் சேர்ப்பிப்பார்.

# பாண்டியநாயகம்

# ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி வரலாறு

—(ஃ)—

சிதம்பர க்ஷேத்திரத்தின் வடக்குக் கோபுர வாசல் மேல் புறத்தில் ஸ்ரீ வள்ளி தேவசேனு சமேதராக வீற்றிருக்கும் சண் முகப்பெருமான், முன்னெருகாலத்தில் ஸ்ரீநடராஜமூர்த்தியின் பஞ்ச கிருத்திய பரமானந்தத் தாண்டவத்தைக் காணவேண்டி, திருக்கோயிலின் மூன்ருவது ஆவரண குமார கோஷ்டமாகிற அருகே ஸ்வயம் ஆவிர்பவத்தையடைந்து விளங்கினுர். பண் டைக்காலத்தில் இந்த இடத்தில் பாண்டிய தேசத்தரசன் ஒரு வனுல் பலவிதமான திருப்பணிகள் நடந்தேறின. அதுகாரண மாக இதற்கு பாண்டியநாயகம் எனப் பெயர் வந்தது. சூரபன் மன் முதலிய அசுரர்களை சங்கரிக்க வேண்டி சுவாமி புறப்பட்ட போது இந்த இடத்திலே தேவர்களோடும் சிலகாலம் தங்கி இருந்தார்.

மூர்த்தி :— பாண்டிய நாயகத்திலே தனது வலதுபுறமாக துர்க்காதேவி, அம்பாள் சன்னிதானம் விளங்க, எதிரே நவலிங் கம் கோயிலும் சிவகங்கையும் பிரகாசிக்க, இடது புறமாக வடக்கு கோபுரம் எல்லோரையும் வந்து எம்பெருமானைத் தரிசியுங்கள் என்று அழைக்கின்ற பாவனையிலே துலங்க, நமது சுப்பிரமணிய மூர்த்தி ஸ்ரீ வள்ளி தேவசேனு சமேதராய் வீற்றிருக்கின்ருர்.

பங்குனி உத்திர உற்சவம் 10-நாள் விசேஷமாக நடைபெறும். மாத கார்த்திகையில் விசேஷ அபிஷேக அலங்கார உற்சவமும் நடைபெறுகிறது. அன்று பக்தர்கள் கூட்டம் அதிகம். நெடுங் காலமாக மிகவும் கிலமாயிருந்த இந்த இடம் தற்சமயம், சிதம்பர வாசியாய் தரும பூஷணமாய் விளங்கும் காசுக்கடை திரு இரத்தினசாமி செட்டியார் அவர்களின் அதிதீவிர முயற்சியினு லும், மற்றும் பல அன்பர்களின் ஆதரவினுலும் ஜீரணோத்தார ணம் செய்யப்பட்டு சென்ற 27—1—47ல் வெகு சிறப்பாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றுக் காண்பதற்கு நேத்ரானந்தமான முறையிலே இரமணீயமாக விளங்குகின்றது.

சூரசம்ஹார வரலாற்றினை வெகு அழகாக, ஒவ்வொரு கட் டம் கட்டமாக எல்லோரும் மிகவும் சுலபமாக அறிந்துகொள்ளக் கூடிய முறையிலே இரவிவர்மாவை நினைவூட்டுகின்றவகையிலே சித்திரங்களாகத் தீட்டிய அந்த கோவிந்தராஜ சிற்பியின் கைத் திறமையே திறமை! தீட்டுகோலின் வன்மையே வன்மை! உருவ அமைப்பின் பெருமையே பெருமை! ஒரு நாளெல்லாம் பார்த்தாலும் ஆசைதீராது! அண்ணாந்து பார்க்கின்ற சிரமமும் தோன்ருது, பசியும் எடுக்காது. இதே ஓவியர் இந்த நடராஜர் கும்பாபிஷேக காலத்திலும் கற்பக விநாயகர் ஆலயம் முதலிய இடங்களிலும் சித்திரங்கள் தீட்டியிருப்பது கண்ணி றைந்த ஆனந்தக் காட்சியாகும்.

---

மகா கும்பாபிஷேக மலர் 2—0—0

சொல்லின் செல்வன் சிறப்புரையுடன்

சிதம்பர க்ஷேத்திர மகிமை 0—6—0

உ

# தேவாரம் - திருவாசகம்

## கணேசர் வணக்கம்

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முத்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

## திருஞானசம்பந்தர்

கற்ருங் கெரியோம்பிக்கலியை வாராமே
செறருர் வாழ்தில்லைச் சித்றம்பல மேய
முற்ருவெண் திங்கள் முதல்வன் பாதமே
பற்ரு நின்ருரைப் பற்ரு பாவமே.

செல்வ நெடுமாடம் சேன்று செஞேங்கிச்
செல்வமதிதோய செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே

காதலாகிக் கசிந்து கண் நீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

## திருநாவுக்கரசர்

குனித்தபுருவமும் சொவ்வைச்செவ்வாயிற்குமிண் சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல் மேனியில் பால்
வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே:

அல்லல் என்செயும் அருவிணைஎன் செயும்
தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என்செயும்
தில்லைமா நகர்ச்சிற்றம்பல வனுர்க்கு
எல்லையில்லதோர் அடிமை பூண்டேனுக்கே.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவாதிருக்க வரந்தரவேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க்கிரங்கி யிருந்தருள் செய்பாதிரிப்புலியூர்
செழுநீர்ப் புறைகங்கை செஞ்சடைமேல்வைத்த
தீவண்ணனே-

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ அன்புடைய
மாமனும் மாமியும் நீ - ஒப்புடைய மாதரும்
ஒண்பொருளும் நீ ஒரு குலமும் சுற்றமும் ஒருரும்
நீ : துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என்நெஞ்சத்துய்பட்டாய் நீ - இப்
பொன் நீ இம்மணி நீ இம்மனுத்து நீ இறைவன் நீ
ஏறூர்ந்த செல்வன் நீயே.

பேராயிரம்பரவி வானேரேத்தும் பெம்மானைப்
பிரிவிலா அடியார்க்கு என்றும் - வாராத செல்வம்
வருவிப்பானை மந்திரமுந் தந்திரமும் மருந்துமாகித்
தீராநோய் தீர்த்தருளவல்லான் நன்னைத் திரிபுரங்கள்
தீயெழத்தின் சிலை கைக்கொண்ட - போரானைப்புள்
ளிருக்கு வேளூரானைப் போற்றுதேயாற்ற
நாள் போக்கினேனே.

## சுந்தரமூர்த்தி

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணைநல்லூர்
அருள்துறையுள்
அத்தா உனக்காளாயினி அல்லேன் எனலாமே

மற்றுப்பத்றெனக்கின்றி நின்திருப்பாதமே மனம்
பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாததன்மை
வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கறையூரில்பாண்டிக்
கொடிமுடி
நற்றவா வுனை நான் மறக்கினுஞ் சொல்லும்நா
நமச்சிவாயமே

பொன்னார் மேனியனே புலிதோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றையணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே

நாடுடைய நாதன்பால் நன்று என்றுஞ் செய்மனமே
நம்மையாளுந்
தாடுடைய தருமனார் தமர் செக்கிலிடும்போது
தடுத்தாட்கொள்வான்
மோடுடையசமணர்க்கு முடையுடைய சாக்கியாக்கு
மூடம்வைத்த
பூடுடையபுலியூர்ச் சிற்றம்பலத்தெம் பெருமானைப்
பெற்றாமன்றே

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கடியேன்
திருநீலகண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன
இளையான்றன் குடிமாறன் அடியார்க்குமடியேன்
வெல்லுமாமிக வல்ல மெய்ப்பொருளுக்கடியேன்
விரிபொழில் சூழ் குன்றையான் விறன மிண்டர்க்யாக்கடியேன்
அல்லிமென் முல்லையந்தரர் அமா நீதிக்கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே

திருவாசகம்

அமமையே அப்பா ஒப்பிலாமணியே அன்பினில்
விளைந்த ஆர்அமுதே - பொய்ம்மையே பெருக்கிப்
பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப்புலையனேன்
தனக்குட் செம்மையேயாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே - இம்மையே
உன்னைச்சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்தருளுவது இனியே

பால் நினைந்தூட்டுந் தாயினும் சாலப்பரிந்து
நீபாவியேனுடைய ஊனினை யுருக்கி
உன்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்துபுறம
புறந்திரிந்த செல்வமே சிவபெரு
மானே - யானுனைத்தொடர்ந்து சிக்
கெனப்பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினியே

அருளா தொழிந்தாலடி யேனையஞ்
சேலென்பார் யாரங்குப் - பேரரு
ளாயென்னைப் புகுந்தாண்ட பொன்
னே பொன்னம்பலக்கூத்தா - மரு
ளார் மனத்தோடுனைப் பிரிந்து
வருந்து வேனை வாவென்றுன் -
தெருளார் கூட்டம் காட்டாயேற்
செத்தே போனற் சிரியாரோ

உ.உ ௭ உ உ

உ
சிவமயம்

# பன்னிரு திருமுறைத் திரட்டு.

## நால்வர் துதி.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

**குறிப்பு :-** 1. பன்னிரு திருமுறைகளைத் தினசரிச் சம்பிரதாயமாகப் படனம் செய்ய விரும்பும் அன்பர்கள், மேற்குறித்த நால்வர் துதியை முன்னர்ச் சொல்லிக்கொண்டு பின்னர்த் திருமுறைப் படனத்தைத் தொடங்கவும்,

2. இத்திரட்டிலுள்ள பாடல்களைப் படனம் செய்யத் தொடங்கும்போதும், முடிக்கும்போதும் "திருச்சிற்றம்பலம்" என்று சொல்லிக்கொள்ளவும்.

---

## முதல் திருமுறை.

### திருஞானசம்பந்த மூர்த்தி நாயனூர்.

பண்—நட்டபாடை—திருப்பிரமபுரம்,

திருச்சிற்றம்பலம்,

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மா னிவனன்றே.

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்தலெளிதாமே.

திருச்சிற்றம்பலம்.

இத்திருப்பதிகம், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனூர், "எண்ணரிய சிவஞானத் தின்னமுதம் குழைத்தருளி உண்

அடிசில் என ஊட்ட" உண்டு, சிவஞான சம்பந்தரான நிலையில், "யார் அளித்த பாலடிசில் உண்டது நீ?" எனச் சிவபாதவிருதயர் வெகுண்டகாலத்து, "உச்சியினில் எடுத்தருளும் ஒரு திருக்கை விரற் சுட்டி," "மழ விடைமேல் நின்றாரை எதிர் காட்டி" உயர்ஞானத் திருமொழியில் "எல்லையிலா மறை முதல் மெய்யுடனெடுத்த எழுதுமறையாகப்" பாடியருளிய முதற்பதிகமாம்.

---

பண்—பழந்தக்கராகம்—திருநெடுங்களம்.

திருச்சிற்றம்பலம்.

மறையுடையாய் தோலுடையாய் வார்சடை மேல்வளரும்
பிறையுடையாய்பிஞ்ஞகனே என்றுன்னைப்பேசினல்லால்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையி னலுயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே.

நீடவல்ல வார்சடையான் மேயநெ டுங்களத்தைச்
சேடர்வாழு மாமறுகில் சிரபுரக் கோனலத்தால்
நாடவல்ல பனுவன்மாலை ஞானசம் பந்தன்சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே.

திருச்சிற்றம்பலம்.

இத்திருப்பதிகத்தைத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருஎறும்பியூர் முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருநெடுங்களத்தை அடைந்து பெருமானை வழிபட்டு "நின்பால் நேசம் செலாவகைத் தடுக்கும் துன்பத்தைத் தீர்த்தருள்வாய்" என வேண்டிப் பாடியருளினார்.

---

பண்—குறிஞ்சி—கோயில்.

திருச்சிற்றம்பலம்.

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோய செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே.

ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே.

திருச்சிற்றம்பலம்.

இத்திருப்பதிகம், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் சீகாழியினின்றும் புறப்பட்டுத் தில்லைக்கு வந்தபோது அடியார்கள் எதிர்கொள்ள நகருட் புகுந்து வீதிகளையும், கோபுர வாயிலையும் வணங்கி உட்சென்று ஆலயத்தை வலமாய்வந்து திருவணுக்கன் திருவாயிலை அடைந்து பரவசமான நிலையில் திருவம்பலத்தில் பஞ்சகிருத்திய ஆனந்தத்தாண்டவம் புரிந்தருளும் கூத்தப் பெருமானைக் கண்டு கும்பிட்டு ஊனும் உயிரும் உருகும் வகையில் பாடியருளியதாகும்.

---

உ

# இரண்டாந் திருமுறை.

பண்—சீகாமரம்—திருமயிலாப்பூர்.

திருச்சிற்றம்பலம்.

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய்.

கானமர் சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்தனலம் புகழ்ந்த பத்தும்வல்லார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்.

திருவொற்றியூரை வணங்கிக் கொண்டு சிவநேசர் வேண்டுகோளுக்கிணங்கி அவரால் உபசரிக்கப் பெற்ற திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் திருமயிலையை அடைந்து "கபாலீச் சரத்தமுதைப் பரவிப் போற்றிப்" பூம்பாவையின் என்பும் சாம்பரும் நிறைந்த குடத்தைத் திருமதில் புறவாய்தலில் கொண்டுவரச் செய்து, திருவருளால் அக்குடத்தினை நோக்கிப் "பூம்பாவை பேர் செப்பி" மண்ணினிற் பிறந்தார் பெறும்

உண்மைப் பயன் இது என உணர்த்தி "மட்டிட்ட" எனும் இந்நற்பதிகத்தை அருளிச் செய்து பூம்பாவையை எழுப்பியருளினர்.

---

## திருநீற்றுத் திருப்பதிகம்.

பண்—காந்தாரம்—திருவாலவாய்.

திருச்சிற்றம்பலம்.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

ஆற்ற லடல்விடை யேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருச்சிற்றம்பலம்.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர், மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் காட்டிய மதுரைத் திருமடத்தில் எழுந்தருளியிருந்த போது, பொருமை காரணமாகச் சமணர்கள் அரசன் அனுமதி பெற்று மடத்திற்குத் தீ வைக்க, அதனைச் சுவாமிகள் "பையவே சென்று பாண்டியற்காக" எனப் பணித்தபோது, அது சென்று கூன் பாண்டியனை வெப்பு நோயாகப் பிடிக்க, அது மந்திரத்தாலும் மருந்தாலும் தீராது கண்ட தேவியார், சுவாமிகளை வரவழைத்து வெப்பு நோயைத் தீர்த்தருளும்படி வேண்ட, அரசனும் ஒப்புக்கொண்டு சுவாமிகளை இரந்து விண்ணப்பஞ் செய்து கொண்ட காலை, சுவாமிகள் இத் திருப்பதிகத்தைப் பாடி அரசன் வெப்பு நோயைத் தீர்த்தருளி அம்மையாரையும் மகிழ்வித்தார்கள்.

---

## கோளறு திருப்பதிகம்.

பண்—பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொ ளாலை விளைசெந்நெ றுன்னி
வளர்செம் பொனெங்கு நிகழ
நான்முக னாதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளு நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொன் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்.

**திருவீழிமிழலையில் ஏற்பட்ட பஞ்சத்தைத் தீர்த்துத் திருமறைக்காட்டில் ஞானசம்பந்த சுவாமிகள் அப்பமூர்த்திகளுடன் எழுந்தருளியிருந்த போது மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் சமண சமயப் படுகுழியில் ஆழ்ந்திருந்த பாண்டி நாட்டின் நவை நெறியை நீக்கித் திருநெறி நடக்கச் செய்தருளச் சுவாமிகளை அங்கு விசயஞ் செய்ய வேண்டிக்கொண்ட காலை, திருஞானசம்பந்த சுவாமிகளும் அவர் வேண்டுகோளுக்கிணங்கிப் பாண்டி நாட்டிற்குப் புறப்பட்டபோது, அப்பர் சுவாமிகள், பிரயாணத்திற்கு ஆகாத நாளாக அன்று இருந்தது என்று தடுத்தருளச் சுவாமிகள் "பரசுவது நம் பெருமான் கழல்கள் என்றால், பழுது அணையாது" என்று சொல்லிப் பரமர்தாள் போற்றி இத்திருப்பதிகத்தை அருளிச் செய்து புறப்பட்டார்.**

—

உ

# மூன்றும் திருமுறை.

பண்—காந்தாரபஞ்சமம்—கோயில்.

திருச்சிற்றம்பலம்,

ஆடினாய்நறு நெய்யொடு பால்தயிர்
அந்தணர்பிரி யாத சிற்றம்பலம்
நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய்மறை யோடு பல்கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்டிங்கள்
சூடினா யருளாய் சுருங்கவெம தொல்வினையே.

நீலத்தார்கரிய மிடற்றார்நல்ல
நெற்றிமேலுற்ற கண்ணினார்பற்று
சூலத்தார் சுடலைப்பொடிநீறணி வார்சடையார்
சீலத்தார்தொழு தேத்துசிற்றம்பலம்
சேர்தலால்கழல் சேவடிகைதொழக்
கோலத்தா யருளாயுன காரணங்கூறுதுமே.

நாறுபூம்பொழில் நண்ணியகாழியுள்
நான்மறைவல்ல ஞானசம்பந்தன்
ஊறுமின்றமிழால் உயர்ந்தாருறை தில்லைதன்னுள்
ஏறுதொல்புகழேந்து சிற்றம்பலத்து
ஈசனையிசையால் சொன்னபத்திவை
கூறுமாறுவல்லார் உயர்ந்தா ரொடுங் கூடுவரே.

திருச்சிற்றம்பலம்.

**திருவுடையந்தணர்வாழ் திருச்சிற்றம்பலம் தொழுது வணங்கிப்பாடிய திருஞானசம்பந்தர் இரவில் அத்தலத்தில் தங்கி இருத்தற்கு அஞ்சித் திருவேட்களத்தில் எழுந்தருளி (தற்போது அண்ணாமலைநகரா யுள்ள தலம்) இருந்து மீண்டும் தில்லையைத் தரிசிக்க வருபவர் இமையவர் கோமான் இணையடிகள் தரித்த மனத்தவர் வாழ்கின்ற தில்லை மூவாயிரவரது அணுக்கத் தொண்டை எண்ணி அதிசயித்து வரும்காலை, தில்லைவாழந்தணர்கள் பிள்ளையாரை வணங்க வரும்போது அவர்களுக்குமுன் தாம் அவரை வணங்கி எழ, இறைவன் திருவருளால் அவர்கள் யாவரும் சிவகணநாதராய்த் தோன்றக் கண்ட காட்சியைத் தாம் பாடிய இத்திருப்பதிகத்தின் மூன்றாந் திருப்பாட்டில் அவ்வடையாளங்களில் அவரைச் சிறப்பித்து அவர் தொழுதேத்து சிற்றம்பலம் என வைத்து வணங்கி வழிபட்டார்.**

9

## நமச்சிவாயத் திருப்பதிகம்.

பண்—கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே.

திருச்சிற்றம்பலம்.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் திருநல்லூர்ப் பெருமணத்தை (ஆச்சாள் புரம்) அடைந்து நம்பாண்டார்நம்பியாரது புதல்வியை வேத விதிப்படி மணந்து எரிவலம் வரவேண்டிய சமயத்தில், 'எரியாவான் இறைவனே' என்று திருக்கோயிலை அடைந்து தம்மை இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததை நினைத்துத் தம் மனைவியோடு இறைவனடிசேரும் ஆதரவு பொங்குவதாலும், தம் திருமணம் தரிசிக்க வந்த சுற்றத்தவரும், ஏனையோரும் இறைவன் அடி எய்துதலை விரும்பியும், பிறவிப் பாசம் தீர்த்தலைச் செம்பொருளாகக் கொண்டு இறைவன் பாதநீழல் சேரும் பருவம் ஈதென்று இத்திருப்பதிகத்தை எடுத்துப்பாடி இறைவன் வகுத்துக் காட்டிய சுயஞ்சோதியில் இந் நமச்சிவாயத் திருப்பதிகத்தை யருளிச் செய்து எல்லோரையும் அதனுள் புகுவித்துத் தாமும் தம் பன்னியோடு புக்கொன்றி உடனனர்.

---

௨

# நான்காந் திருமுறை.

## திருநாவுக்கரசு சுவாமிகள்.

பண்—கொல்லி—திருவதிகைவீரட்டானம்.

திருச்சிற்றம்பலம்.

கூற்று யினவா றுவிலக் ககிலீர்
 கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றுய் அடிக்கே இரவும் பகலும்
 பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்று தென்வயிற் றினகம் படியே
 குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
 வீரட் டானத் துறையம் மானே,

போர்த்தா யங்கொரா ணையினீ ருரிதோல்
புறங்கா டரங்கா நடமா டவல்லாய்
ஆர்த்தான் அரக்கன் தனைமால் வரைக்கீழ்
அடர்த்திட் டருள்செய் தவது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வே தனையா னவிலக் கியிடாய்
ஆர்த்தார் புனல்சூ ழதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

திருச்சிற்றம்பலம்.

நல்லாறு தெரிந்திருந்தும் நம்பரருளாமையால், கொல்லாமை மறைந்துறையும் அமண்சமயம் குறுகிய மருணீக்கியாரைத் திலகவதியார் வேண்டுகோளுக்கிணங்கித் திருவதிகை வீரட்டானேச்சுரப் பெருமான் கொடுஞ் சூலை நோயினால் வருந்தச் செய்து, அச்சமயத்தார் அவரைக் கைவிடத் திலகவதியார் தாள் வந்து சேரச் செய்தார். அனைத்துயிர்க்கும் அருள் தாங்கிய அம்மையாரும், தன் திருவடியே சரண் என்று வீழ்ந்த தம்பியை எழுமாறு செய்து திருநீற்றை அஞ்செழுத்தோதிக் கொடுத்து அணிந்து கொள்ளச் செய்தார். பிறகு இருவரும் திருவதிகை வீரட்டான ஆலயத்துள் புகுந்தனர். உள்ளே சென்ற நாயனார் ஆலயத்தை வலம்வந்து சந்நிதியில் விழுந்து வணங்கி எழுந்து நின்றார். இறைவன் திருவருளால் பாடும் தன்மை பெற்றார். உடனே தமது சூலை நோய் நீங்குமாறும், உலகமெல்லாம் ஓதி உய்யுமாறும் "கூற்றாயினவாறு" எனும் இத்திருப்பதிகத்தைப் பாடினார். சூலைநோயும் ஒழிந்தது. இறைவனும் அவர்பாடலுக் கிரங்கி இவர்நாமம் "நாவுக்கரசு" என எவ்வுலகங்களினும் வழங்குக என்றருளினார்.

---

## நமச்சிவாயத் திருப்பதிகம்.

பண்—காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

மாப்பிணைத் தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சிவா யப்பத்தும்
ஏத்தவல் லார்தமக்கு இடுக்கண் இல்லையே.

திருச்சிற்றம்பலம்.

பலவிதமான தண்டனைகளை இழைத்தும் அவற்றினின்றும் தப்பிப் பிழைத்த வாகீசப் பெருந்தகையாரைப் பார்த்து மானமும், பொறாமையும் அச்சமும் மிகுந்த சமணர்கள் மீண்டும் பல்லவ அரசனை அடைந்து அவன் அனுமதி பெற்று, அப்பரைக் கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலில் இட்டனர். சிந்தனை உறைப்புடைய மெய்த்தொண்டராகிய வாகீசர், உலக பிதாவாகிய இறைவனை ஏத்தவெண்ணித் திருவைந்தெழுத்தைத் துதிக்கத் தொடங்குபவராய் "சொற்றுணை வேதியன்" என்னும் இப்பதிகத்தைப் பாடிய அளவில் அவரைப் பிணித்த பாசங்கள் அற, அவரைக் கட்டிய கல்லே தெப்பமாக மாற அதன்மீது அரசு மிதந்து கரையேறினர் என்ப.

---

உ

## ஐந்தாம் திருமுறை

### திருக்குறுந்தொகை—கோயில்.

திருச்சிற்றம்பலம்.

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனே.

முழுதும் வானுல கத்துள தேவர்கள்
தொழுதும் போற்றியும் தூயசெம் பொன்னினால்
எழுதி மேய்ந்தசிற் றம்பலக் கூத்தனை
இழுதை யேன்மறந் தெங்ஙனம் உய்வனே.

ஓங்கு மால்வரை ஏந்தலுற் றான்சிரம்
வீங்கி விம்முற வூன்றிய தாளினான்
தேங்கி நீர்வயல் சூழ்தில்லைக் கூத்தனைப்
பாங்கி லாத்தொண்ட னேன்மறந் துய்வனே.

திருச்சிற்றம்பலம்.

DONATED BY
THANGAVELU AMIE...
...MASTER

திருநாவுக்கரசு சுவாமிகள் திருவேட்களம், திருக்கழிப்பாலை முதலிய தலங்களை வணங்கி மீண்டும் தில்லையை வணங்க எண்ணி எழுந்தருளி வரும்போது, இத்திருப்பதிகத்தைப் பாடத் தொடங்கி ஒவ்வொரு திருப்பாட்டிலும் "அம்பலக் கூத்தனைத் தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ" என்று பாடிக் கொண்டே திருத்தில்லையை அடைந்தார்கள்.

---

உ

## ஆறுந் திருமுறை

பெரிய திருத்தாண்டகம்—கோயில்.

திருச்சிற்றம்பலம்.

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகன்ஞாலத் தகத்துட் டோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனர் தில்லையில், "அரியானை" என்றெடுத்து அடியவருக் கெளியானை, அவர் தஞ்சிந்தை பிரியாத பெரியானை எனப் போற்றிய பெரிய திருத்தாண்டகத்தின் ஐந்தாம் திருப்பாட்டாக இப்பாடல் அமைந்துள்ளது.

---

உ

## ஏழாந் திருமுறை.

### சுந்தரமூர்த்தி நாயனர்.

பண்—இந்தளம்—திருவெண்ணெய்நல்லூர்.

திருச்சிற்றம்பலம்.

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
அத்தா உனக்காளாயினி அல்லே னெனலாமே. [டுறையுள்

காரூர்புனல் எய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புகழ் எய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்ப்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறை
ஆரூரனெம் பெருமாற்காள் அல்லே னெனல்ஆமே.[யுள்

திருச்சிற்றம்பலம்.

சிவபெருமான் விருத்தப் பிராமணராக எழுந்தருளிச் சுந்தரமூர்த்திநாயனர் தமக்கடிமை என்று ஒரு ஓலையைக்காட்டி அவர்தம் திருமணத்தைத் தவிர்த்துத் திருவெண்ணெய் நல்லூரில் நம்பிகளை ஆட்கொண்டருளிய காலை, ஆளுடைய நம்பிகள் "பித்தா பிறைசூடி" எனும் பெரிதாமித் திருப்பதிகத்தை, இத்தாரணி முதலாம் உலகெல்லாம் உய்யப் பாடியருளினர்.

---

## நமச்சிவாயத் திருப்பதிகம்.

பண்—பழம்பஞ்சுரம்—திருப்பாண்டிக்கொடுமுடி.

திருச்சிற்றம்பலம்.

மற்றுப் பற்றெனக் கின்றிநின்திருப் பாதமேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேனினிப்பிற வாததன்மை வந்தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரில் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாவுனை நான்ம றக்கினும் சொல்லும்நா நமச்சி வாயவே.

கோணிய பிறைசூடியைக் கறையூரில் பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப் பிஞ்ஞகப் பித்தனைப் பிறப்பில்லியைப்
பாணுலாவரி வண்டறை கொன்றைத் தாரனைப்படப் பாம்பரை
நாணனைத் தொண்டன் ஊரன் சொல்லிவை சொல்லுவார்க்
[கில்லை துன்பமே.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி நாயனர் ஈங்கோய் மலை முதலாக விமலரது பதிகளை வணங்கிக் "குரவலர் சோலை அணி திருப்பாண்டிக் கொடுமுடி அணைந்தனர் கொங்கில்". அங்குள்ள பெருமானை "அன்பினில் தாழ்ந்து பொங்கியவேட்கை பெருகிடத் தொழுது" புனிதர் பொன்மேனியை நோக்கி இவரை மறக்க வொண்ணுது என்ற மெய்க்குறிப்புடன் இத்திருப்பதிகத்தைப் பாடியருளினர்கள்.

---

## திருத்தொண்டத் தொகை.

பண்—கொல்லிக்கௌவாணம்—திருவாரூர்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழ அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனூர்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையான் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க்கு அடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க்கு அடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக்கு அன்பரா வாரே.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூர்ப் பூங்கோயிலுக்குள் எழுந்தருளியபோது, தேவாசிரிய மண்டபத்தில் விண்ணவர் ஒழிய மண்மேல் மிக்க சீர் அடியார்கூடி எண்ணிலார் எழுந்தருளியிருந்த காட்சியைக் கண்டு, "இவர்க்கு யான் அடியானாகப் பண்ணுநாள் எந்நாள்" என்று புறநிடங் கொண்டாரைப் பரவச் சென்றார். அடியார் பெருமையைத் திருத்தொண்டத் தொகைமூலம் உலகவர்க்கறிவிப்ப எண்ணிய இறைவன் "அல்லல்தீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்கால் தில்லை வாழந்தணர்தம்" என்ற அடியை எடுத்துக் கொடுத்து அடியார் திருக்கூட்டத்தைப்பாடி வணங்கும்படி நம்பியாரூரரைப் பணித்தார்.

---

உ

# எட்டாந் திருமுறை.

## ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்.

திருவாசகம்.

திருச்சிற்றம்பலம்,

தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ.

---

திருக்கோவையார்.

புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியாது
இரங்கிடெந் தாயென்று இரப்பத்தன் ஈரடிக்குஎன்னிரண்டு
கரங்கள்தந் தான் ஒன்று காட்டமற்று ஆங்கதும் காட்டிடென்று
வரங்கிடந் தான்தில்லை அம்பல முன்றிலம் மாயவனே.

திருச்சிற்றம்பலம்.

---

உ

# ஒன்பதாந் திருமுறை

## திருவிசைப்பா—கருவூர்த்தேவர்—கோயில்.

திருச்சிற்றம்பலம்.

துந்துபி குழல்யாழ் மொந்தை வானியம்பத்
தொடர்ந்திருடியர் கணம் துதிப்ப
நந்திகை முழவ முகிலென முழங்க
நடம்புரி பரமர்தம் கோயில்
அந்தியில் மறைநான்கு ஆரணம் பொதிந்த
அரும்பெறன் மறைப் பொருள் மறையோர்
சிந்தையில் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம்பலமே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்பல்லாண்டு—கோயில்.

திருச்சிற்றம்பலம்.

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடைஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகனங்கி இரவியும் இந்திரனும்
தேரார்வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்துநிறைந்து
பாரார்தொல்புகழ் பாடியுமாடியும் பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்.

---

உ

# பத்தாந் திருமுறை.

## திருமூல தேவர்.

திருச்சிற்றம்பலம்.

செம்புபொன் ஆகும் சிவாய நமவென்னில்
செம்புபொன் ஆகத் திரண்டது சிற்பரம்
செம்புபொன் ஆகும் ஸ்ரீயும் கிரீயுமெனச்
செம்புபொன் ஆன திருஅம் பலமே.

---

உ

# பதினொராந் திருமுறை.

## நம்பியாண்டார் நம்பிகள்.

கோயில் திருப்பண்ணியர் திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்.

சிரித்திட்ட செம்பவளத்தின் திரளும் செழுஞ்சடை மேல்
விரித்திட்ட பைங் கதிர்த் திங்களும் வெங்கதப் பாந்தளுந்தீத்
தரித்திட்ட அங்கையும் சங்கச் சுருளும் என்னெஞ் சினுள்ளே
தெரித்திட்ட வாதில்லைச் சிற்றம்பலத்துத் திருநடனே.

திருச்சிற்றம்பலம்.

---

உ

# பன்னிரண்டாந் திருமுறை.

## சேக்கிழார் சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

என்று மின்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

திருச்சிற்றம்பலம்.

---

## வாழ்த்து.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

# அமிர்தாஞ்சனம்.

எல்லாவித வலிகளுக்கும்,

நோய்களுக்கும்,

சளி, தலைவலிகளுக்கும்

நிகரற்றது.






"சிவகுரு முருகவசி"

# வெண் சருமநோய்.

8 மாதத்தில் குணமளிக்க உத்திரவாதம்,

தீராத நோய்களுக்கும் எங்கள் வைத்தியசாலையில் மருந்துகள் இருக்கின்றன. விபரங்களுக்கு 15 நயா பைசா ஸ்டாம்புடன் எழுதவும். இலவசக் காட்லாக்கிற்கு எழுதவும்.

**டாக்டர் சிவானந்தா (R. I. M. P.)**

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,

திருவழுந்தூர் — மாயூரம் — தஞ்சை ஜில்லா.

## எங்கள் புதிய வெளியீடுகள் !

1. திருக்குறள்-குழந்தை உரை 3-ஆம் பதிப்பு விலை ரூ 4-0-0
2. கொங்குக்குலமணிகள் புலவர் குழந்தை ரூ. 1-0-0
3. நெருஞ்சிப் பழம் புலவர் குழந்தை எழுதிய கதைகள் } ரூ. 0-75
4. பாரும்–போரும் புலவர் சண்முகம் B. A., எழுதிய அருமையான விமர்சன நூல் ரூ. 1-50

மற்றும் படிப்பதற்கும், பரிசளிப்பதற்குமுள்ள தலைசிறந்த நூல்களனைத்தும் எங்களிடம் கிடைக்கும்.

**சிவலிங்க நாற்பதிப்புக் கழகம்,**
ஈரோடு.

---

## இன்றே எழுதுங்கள்!

| | |
|---|---|
| வடலூர் இராமலிங்க சுவாமிகள் விரிவான சரிதம் உயர்திரு. யோகி சுத்தானந்த பாரதியார் முன்னுரையுடன் விலை | ரூ. 5—0—0 |
| சுவாமிகளும் சித்துகளும் ... ... | ரூ. 1—0—0 |
| வடலூர் இராமலிங்கம் வருவாரா ? | ரூ. 1—0—0 |
| பழநி க்ஷேத்திர மகிமை ... ... ... | ரூ. 0—75 |
| கும்பகோணம் ... ... ... | ரூ. 0—6—0 |
| வைத்தீஸ்வரன்கோயில் ... ... | ரூ. 0—4—0 |
| இராமலிங்கசுவாமி சாதகம் ... ... (காக்கேயர்—குமரகுருபரர்) | ரூ. 1—0—0 |
| நாவலரும் — சுவாமிகளும் ... ... | ரூ. 1—0—0 |

**அருள்சோதி ஆஸ்ரமம்,**
3, பாவாமுதலி தெரு, : : சிதம்பரம்.

விரைவில் வெளிவரும்!

# சிதம்பர நாடகம்

அல்லது

# ஸ்ரீ இராமலிங்க விலாசம்

விலை அணா 8. சரித்திரத்துடன் ரூ 1.

முன்னதாக பெயரை பதிவுசெய்து கொள்வோருக்கு
தபால் சார்ஜ் இலவசம்.

---

சொற்பபிரதிகளே! முந்துங்கள்!

# வடலூர் இராமலிங்க சுவாமிகள்

(விரிவானசரிதம்)

உயர் திரு; யோகி, சு. பாரதியார் முன்னுரையுடன்
இன்றே! எழுதுக!

விலை ரூ 5.

---

# தை பூச மலர்

விலை ரூ 1.

---

## அதிர்ஷ்டம், நல்லகாலம், ஆரோக்யம்.

15. நயேபைசா ஸ்டாம்பு அனுப்பவும்

---

ஆசிரியர்:

சி. பி. மாசிலாமணி, பி. ஏ.,

அருள்ஜோதி ஆஸ்ரமம்,

3. பாவாமுதலி தெரு, சிதம்பரம்.

National (Power) Printers, Chidambaram.

ஒருநாளும் மறக்க முடியாதது!

போன்: 200. **R. R. C.** தந்தி: ஜுவல்லரி

# —[ஆபரண மாளிகையில்]—

பலவருடங்களாக மதுரையில் ஸ்தாபிக்கப் பெற்று அன்று முதல் இன்று வரையில் பல்லாயிரக்கணக்கான ஜனங்களுக்கு உத்திரவாதம் பெற்ற உயரிய வெள்ளிப் பாத்திரங்களையும், அழகிய பவுன் நகைகளையும் விற்று வந்து, வாங்குபவர்களின் பூரண திருப்தியைப் பெற்று வந்தது அனைவருக்கும் தெரிந்த விஷயம்.

பவுன் நகைகள், கல்லிழைத்த நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் இவைகளில் நாளுக்கு நாள் மாறிக் கொண்டே வரும் Fashion) எனப்படும் மக்களது விருப்பத்தின் மாறுதல்களை அப்பொழுதுக் கப்பொழுது கவனித்து அவர்கள் மிகவும் உகந்து விரும்பும் அத்தகைய மாறுதல்களையே நம் கைவசம் வைத்து விற்று வருவதால் தற்சமயம் எது (Fashion) என்பது அறிய எங்களது கடையிலுள்ள ரகங்களை காக்ஷியிட்டாலே போதும்.

அசல் வெள்ளிக்கும் தங்கத்திற்கும் என்றும் இன்றும் தங்குதடையில்லாத உத்திரவாதமுண்டு அன்றியும் தோஷமற்ற பூரிப்புள்ள வைரங்களும் நியாயமான விலைக்கே கிடைக்கும்.

**R. ராமநாதன் செட்டியார்**

தங்கநகை, & வெள்ளிப்பாத்திர வியாபாரம்,

40-41, கீழ ஆவணிமூலவீதி, மதுரை.

கல்லூரி மாணவர்கட்கும் மாணவிகட்கும்
கல்வியில் ஞாபக சக்தியை அளிப்பது

வழக்கறிஞர்கள் வாதாடும் நேரத்தில்
உறுதுணையாய் நின்று ஊக்கமளிப்பது

பக்திப் பரவசத்துடன் மோனத்திலிருக்கும்
நிலையில் பக்தகோடிகள் நாசி மறவாதது

சந்தைக்கடையில் எந்த நேரமும்
எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுவது

# N. V. S.

# பட்டணம் பொடி ஒன்றே!

எனவே, அன்பர்கள் என்றும்

N. V. S. பட்டணம் பொடியே பேறுக.

## N. V. ஷண்முகம் கம்பெனியார்,

பட்டணம்பொடி தொழிற்சாலை,

த. பெ. நெ. 555, வண்ணாரப்பேட்டை,

மதராஸ்—21.

*தந்தி : மூக்குத்தூள்.* *போன் : 407.*

# நவ மூல நாசகாரி

காட்டுக்கருணை, கரிக்கருணை, புளிக்கருணை,
நேடிக்கருணை, காராக்கருணை, இவைகளைக்
கோண்டு முன்னோர் முறைப்படி முப்பு
சேர்த்து தயாரித்த

## "கருணைக் கிழங்கு கிருதம்"

மூலமூளை எரிச்சல், குத்தல், இரத்தம் பீரிட்டு வருதல், ஆசனக்கடுப்பு, கீழ்மூலம், முதலியவைகளை அதிஅபூர்வ குணம் தந்து மலச்சிக்கலைப் போக்கி வாய்வு உபத்திரங்களை நீக்கி நல்ல பசியைக் கோடுத்து ஜீரண சக்தியைக் கோடுக்கும். இதைத் தினம் காலை மாலை மோரில் கலந்து சாப்பிட்டுவந்தால் நவமூலங்களையும் ஆபரேஷன் இல்லாமல் பூரண குணம் கிடைக்கச்செய்யும். இதனால் நல்ல ஆகாரம் உட்கோள்ள நேரிடும். சோகை வெளுப்பு மாறும். நல்ல இரத்தம் ஊறும். திரேக ஆரோக்கியம் கிடைக்கும். நோய் பலம் போல் மருந்து சாப்பிடவேண்டும்.

தபால் செலவு உள்பட 60-வேளை மருந்து ரூ. 9.

R. M. K. *ராஜலிங்கம் வைத்தியசாலை,*

பழனி.

## சி. எம். சாமியின் தங்க பஸ்பம்.

உபயோகியுங்கள்.

இல்லற இன்பத்தையும், வாலிபத் தன்மையையும், எளிதில் பெறச் செய்கிறது. சகல வியாதிகளையும் நீக்கி சரீர சுகத்தைத் தருகிறது. அபார பலமும், பசியும், இரத்த விர்த்தியும் உண்டாக்குகிறது.

24-நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி (S. I.)

---

## GANESH & Co.,

Dispensing Chemists & Druggists.

## கணேஷ் அண்டு கோ.,

*106, மேலவீதி, சிதம்பரம்.*

எங்களிடம் எல்லாவிதமான இங்கிலீஷ் மருந்துகளும் ஊசி மருந்துகளும் கிடைக்கும். டாக்டர்கள் சீட்டின்படி மருந்துகள் தயாரித்தும் தரப்படும்.

P. S. P. S. சபாபதி முதலியார்.

---

## ★ அதிர்ஷ்டம் ★

### நல்லகாலம் - ஆரோக்யம்

15 ந. பை. ஸ்டாம்பு அனுப்புக.

அருள்சோதி ஆசிரமம்

3, பாவாமுதலி தெரு, சிதம்பரம்,

# சுல்தானியா படை மருந்து.

(ரிஜிஸ்டர்ட்)

## 24-மணிக்குள் குணம்

இப்படை மருந்து 40-வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன், மலாய்காடு, முதலிய தேசங்களில் நற்கியாதியுடன் உபயோகிக்கப்பட்டு கோடிக்கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து தங்கமெடல்களும் நற் சாக்ஷிப் பத்திரங்களும் பெற்றது.

எல்லாவித படை, சொரி, சிரங்கு, அரிப்பு, கக்கூஸ்பத்து, வண்டுகடி, புழுக்கடி, சேற்றுப்புண், எச்சிற்றழும்பு, எக்ஸிமா, கருநிறமுள்ள தடிப்பு, சிட்டை, முதலிய சர்ம வியாதிகளை வெளிப்பிரயோகத்தினால் அதிக சீக்கிரம் குணமடையச் செய்யும். ஒரு முறை பரீக்ஷிப்பது கொண்டு உண்மை விளங்கும்.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:-

**ஜெயரசம் டிப்போ,**

அய்யம்பேட்டை.

(S. I. Ry.)

சிறிய சைஸ் விலை அணா 0—6—0

பெரிய சைஸ் விலை அணா 0—12—0

ஸ்டாகிஸ்ட்:—

SRI VENKATESWARA TRADING ORGANISATION

**West Car Street, CHIDAMBARAM.**

## ஸ்ரீ நடராஜ விலாஸ்,

**காபி & சாப்பாடு ஹோட்டல், கீழசன்னதி, சிதம்பரம்.**

உயர்ந்த ரக சிற்றுண்டிகளுக்கும், சாப்பாட்டிற்கும் உகந்த இடம். நீண்ட நாளாக யாத்ரீகர்களுக்கு சேவைசெய்துவரும் சிறந்த ஸ்தாபனம்.

புரோப்ரைட்டர் S. அனந்தநாராயணய்யர்.

---

## "ஸ்ரீ ராஜலெக்ஷ்மி"

## போர்டிங் & லாட்ஜிங்

ரயில்வேஸ்டேஷன் சமீபம். தங்குவதற்கு வசதியான இடம். காற்றோட்டமான அறைகள். நேர்த்தியான சிற்றுண்டிகள். ருசிகரமான சாப்பாடு.

---

## சுதேசி காபி கிளப்

மேலவீதி, (மார்க்கெட் எதிரில்)

**காபி & சாப்பாடு ஹோட்டல்**

இரவில் சம்பா கோஸ்து! பாதாம்கீர், ரோஸ்மில்க், லெமன் கிரஷ் முதலிய மதுரபானங்கள்.

---

## "ஸ்ரீ வர்த்தனீ பவன்"

போர்டிங் & லாட்ஜிங் : : மேலவீதி, சிதம்பரம்.

நகருக்கு நடுவில், கோயிலுக்கு சமீபத்தில், கோர்ட், தபாலாபீஸ் அருகில் அமைந்துள்ளது. சௌகரியமாய்த் தங்குவதற்கும் சிற்றுண்டி உணவு கொள்வதற்கும் சிறந்த இடம்.

# ஸ்ரீ நடராஜா லஞ்சு ஹோம்,

காபி & சாப்பாடு ஹோட்டல்,

78-A, சபாநாயகர் தெரு, சிதம்பரம்.

உள்ளத்திற்கும் உடலுக்கும் திருப்திகரமான
கார தித்திப்பு பட்சணங்கள்!

நாவுக்கினிய நல்ல சாப்பாடு!

வேலூரில் (வ. ஆ.)

சிறந்த சிற்றுண்டி சாப்பாட்டுடன் தங்குவதற்கு
வசதியான ரூம்களுக்கு

# மினர்வா கபே

Proprietors:

C. B. Rama Rao, R. Narayana Iyer,

போன்: 590 ] மைசூரில் நீங்கள் [ தந்தி: INDBAN.

## "இந்திர பவனில்"

தங்குவீர்களானால் உங்கள் மைசூர் விஜயம் என்றும்
மறக்கமுடியாததாக இருக்கும்

போர்டிங் லாட்ஜிங்: தன்வந்திரி ரோடு மைசூர்.

சுகம், சௌகரியம், மரியாதை முதலியவைகளுக்கும், வட இந்திய
பக்ஷணங்கள் தயாரிப்புக்கும் பேயர்பெற்றது.

ஞாயிறுதோறும் பகல் ஸ்பெஷல் சாப்பாடு ரசிக்கத்தகுந்தது.

குணத்தில் சிறந்தது

## எல். ஜி. L. G.

கூட்டு பெருங்காயம்.

(COMPOURDED ASAFOETIDA.)

மார்க்கை கவனித்து வாங்கவும்.

## லால்ஜி கோது அண்ட் கோ.,

தலைமை: பம்பாய், மதருஸ். கிளை: கும்பகோணம்.

Tel: "NEW INDIA"  Phone 33.

# THE NEW INDIA TRADING COMPANY LTD.,

Quality Maligai Merchants,

45-46, West Car Street, CHIDAMBARAM.

## தங்களுக்கு வேண்டிய

சகல மளிகை சாமான்களும் உற்பத்தி ஸ்தலங்களிலிருந்து அறுவடை காலங்களில் ஏராளமாக சகாயவிலையில் பதினாயிரக்கணக்கான மூட்டைகள் கோள்முதல்செய்து ஸ்டாக்செய்து வாடிக்கைக்காரர்களுக்கு சகாயமான விலையில் சப்ளை செய்கிறோம்.

கறார் விலை! ஆனால் சகாய விலை!!

வந்து பாருங்கள்! திருப்தியடைவீர்கள்!!

தங்கள் உண்மையுள்ள,

**ஆர். எஸ். ராமானுஜம்,**

மானேஜிங் டைரக்டர்.

# ஸ்ரீ நடராஜ விலாஸ்

**ஜுவெல்லரி ஹால், சிதம்பரம்.**

S.R சீல் உத்திரவாதமுள்ளது



# SRI NATARAJA VILAS

JEL[illegible]ERY HALL

**PROP: S. RATHNASWAMY CHETTIAR**

**CHIDAMBARAM**

TEL: JEWELLERY........ POST BOX:14............ PHONE:22